Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி · PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆவணி 06 | 22-08-94 | திங்கட்கிழமை | ஓசை 185

## உலகில் தானியப் பற்றாக்குறை அபாயம் குறித்து எச்சரிக்கை

2030 ஆம் ஆண்டில் பூமியில் மக்கள் தொகை 890 கோடியாக அதிகரிக்கவுள்ளநிலையில் உணவு உற்பத்தி படிப்படியாக வீழ்ச்சியடையும் என்றும் இதனால் தானியப் பற்றாக்குறை ஏற்படும் என்றும் உலக அவதான நிறுவனம் என்ற வாஷிங்டன் ஆராய்ச்சிக்குழு தெரிவித்துள்ளது- அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலேயே மக்கள் தொகை அதிகரிக்கும்- உலக மக்கள் தொகைக்கேற்ற வகையில் உணவு உற்பத்தி அடுத்த 40 ஆண்டுகளில் பாதிக்கப்படும். 2030 ஆம் ஆண்டில் உலகில் தானிய (6ஆம் பக்கம் பார்க்க)

# புதிய அரசாங்கத்தில் சேர

# ஈ. பி. டி. பி. பகீரத முயற்சி!

## போக்கிடமின்றித் தவிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் இணைந்து கொள்வதற்கு ஈ. பி. டி. பி. பகீரத முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், அதற்காக எந்தவித நிபந்தனையற்ற ஆதரவையும் புதிய அரசாங்கத்திற்கு வழங்க அவை தயாராக இருப்பதாகவும் தெரியவருகின்றது. ஐ. தே. க. ஆட்சியில் இருக்கும்வரை அதன் ஆயுதக் குழுவாகச் செயற்பட்ட ஈ பி. டி. பி. இன்று போக்கிடம் இன்றி இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வியினால் ஈ.பி.டி.பி. குழு கதிகலங்கிப் போயிருப்பதாகவும் இவ் இக்கட்டான நிலையிலிருந்து மீள்வதற்கு அது பல முயற்சிகளை மேற்கொண்டுவருவதாகவும் பிரான்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஓர் இராணுவ அணியாக இக்குழு செயற்பட்டதாகவும் தொடர்ந்து இவ்வாறு செயலாற்றும் நோக்கத்துடன் தீவுப் பகுதியில் போட்டியிட்டது எனவும் எனினும் ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வி ஈ. பி. டி. பி குழுவினரை கதிகலங்க வைத்தி [6ஆம் பக்கம் பார்க்க]

## ஈ.பி.டி.பியின் ஒத்துழைப்பை நாம் பெற்றுக்கொள்ளப் போவதில்லை

### பொ. ஐ. மு. அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஈ. பி. டி. பி. எமது அர... காரணத்தை ஆராய வேண்டும் என புதிய அரசின் சிரே... டி. பியின் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி அடை...

## புலிகள் தவிர தமிழ்க் குழுக்கள் போராடும் சக்தியை இழந்துவிட்டன

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் குழுக்கள் யாவும் சிறிலங்கா அரசை எதிர்த்து போராடும் சக்தியை இழந்துவிட்டன என கொழும்பு வார ஏடு ஒன்று தெரிவித்துள்ளது.

தமது இருப்பை வெளிப்படுத்த வேண்டுமானால் சிறிலங்கா பாராளுமன்றில் சில ஆசனங்களையாவது பெற வேண்டும் என்பதே சிறிலங்காவிலுள்ள தமிழ் கட்சிகளின் நோக்கம். சிறிலங்கா பாராளுமன்றம் தமிழர் நம்பிக்கையை இழந்துவிட்ட ஓர் அமைப்பாக உள்ளது. தேர்தல் எந்த திருப்தியையும் தரப்போவதில்லை என தமிழர் உணர்ந்துள்ளனர்.

தமிழருக்கு நம்பிக்கையூட்டக்கூடிய சக்தி எதுவும் தற்போதும் தேர்தல் அரங்கில் தோன்றியிருக்கவில்லை என்பதே உண்மை என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதிச் செயலகம் மக்களை வதைக்கின்றது

### ஊரடங்கு குறித்து குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொதுத் தேர்தலின் பின்னர் ஜனாதிபதி செயலகம் பிடிவாத போக்குடனும், பொறுப்பற்ற தன்மையுடன் ஊரடங்கு சட்டத்தை திடீர் திடீர் என மாற்றி மக்களை திட்டமிட்டு வதைப்பதாக கம்பஹா மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பெனான்டோபிள்ளை தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ஊரடங்கு சட்டத்தை ஒழுங்கான முறையில் செயல்படுத்தாது திடீர் என நேரத்தை மாற்றியதினால் பொதுமக்கள் தொடர்ந்து நீண்ட துன்பத்தை அனுபவித்து வருவதாக இது புதிய அரசாங்கம் தொடர்பாக மக்கள் மத்தியில் ஓர் வெறுப்பை ஏற்படுத்தும் நோக்குடன் ஜனாதிபதி செயலகம் மேற்கொள்ளும் திட்டமிட்ட நட (6 ஆம் பக்கம் பார்க்க)

## வன்முறை சம்பவங்களில் மேலும் ஒருவர் பலி

சிலாபம் தொகுதியில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் சில வன்செயல் சம்பவங்கள் இடம் பெற்றிருப்பதாக பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

நேற்று முன்தினத்தில் மட்டும் இச்சம்பவங்கள் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது. மேலும் தேர்தலுக்கு பின்னர் அமைதியை நிலை நாட்டுவதில் சமாதானக் குழுக்கள் பெரும் பங்கு வகித்ததாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

## சந்திரிகா - அதிமேற்றாணியார் இனப்பிரச்சினை குறித்து பேச்சு

(கொழும்பு)

பிரதமர் சந்திரிகா குமாரணதுங்க நேற்று கொழும்பு ஆயர் இல்லம் சென்று அதிமேற்றாணியார் அதிவண. கலாநிதி நிக்கலஸ் மார்கஸ் பெர்னாண்டோவை சந்தித்துப் பேசினார், பேச்சுக்களின் போது இனப்பிரச்சினை தீர்வு விடயம் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாக சிறிலங்கா வானொலி நேற்று மாலை அறிவித்தது.

பேச்சுக்களின்போது துணை மேற்றாணியார் ஒஸ்வால் கோமஸ், ஆயர் ரஞ்சித் மல்கம் ஆகியோரும் உடனிருந்தனர். பல்வேறு விடயங்கள் இப்பேச்சுக்களின்போது ஆராயப்பட்டது, இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயம் முக்கிய கவனத்தை பெற்றதாக சிறிலங்கா வானொலி மேலும் தெரிவித்தது.

சந்திரிகாவுடன் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி. வி. குணரட்னவும் சென்றிருந்தார்.

## புதன் மாணவர் அரங்கு

அடுத்த மாணவர் அரங்கு நாளை மறுதினம் வெளிவரும்.

இதில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான 'அளவையியல்' பரீட்சை வழிகாட்டி வெளிவரவுள்ளது.

## விமானப் படைத் தலைமையகம்

### பொ. ஐ. மு. அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஈ. பி. டி. பி. எமது அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கும் என்ற செய்தி தவறு. எமக்கு அந்த ஒத்துழைப்பு பெற்றுக் கொள்வதில் விருப்பமில்லை. அவர்கள் என்ன காரணத்திற்காக ஒத்துழைப்பு வழங்க முன்வருகின்றனர் என்ற காரணத்தை ஆராய வேண்டும் என புதிய அரசின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் குறிப்பிட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈ. பி. டி. பி. உட்பட ஏனைய இயக்கங்கள் கொழும்பில் ஆயுதங்களுடன் நடமாட அனுமதியோம் ஈ. பி. டி. பியின் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி அடையாள அட்டை பறிமுதல் செய்யப்படும்.

நாம்விடுதலைப்புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த வருமாறு விடுத்த அழைப்பிற்கு அந்த இயக்கம் வரவே

(6 ஆம் பக்கம் பார்க்க)

### திருமலை - பருத்தித்துறை கப்பற்சேவை

# ஈ. பி. டி. பியின் கண்காணிப்பை கடற்படை தடுத்து நிறுத்தியது

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை துறைமுகத்தில் நரோமா கப்பல் பயணிகள் சேவையை கண்காணித்து வந்த ஈ.பி.டி.பி குழுவினரின் நடவடிக்கையை கடற்படையினர் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் திருகோணமலை துறைமுகப் பகுதியில் தரித்து நின்ற நரோமா கப்பலின் பயணிகள் சேவையை நிர்வகிக்க முயன்ற மேற்படி குழுவினர் வெளியேற்றப் பட்டுள்ளனர்.

திருகோணமலை துறைமுகப் பகுதியிலிருந்து காங்கேசன் துறைமுகம் ஊடாக பருத்தித்துறை வரை பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வரும் நரோமா கப்பல் சேவையை நிர்வகித்து வரும் நடவடிக்கையில் நீண்ட நாட்களாக ஈ.பி.டி.பி குழுவினர் ஈடுபட்டுவந்தனர்.

கடந்த 19ஆம் திகதி சந்திரிகா விஜேகுமாரணதுங்கா புதிய பிரதமராக பதவி ஏற்றதன் பின் நேற்று முன்தினம் திருமலைதுறை முகப் பகுதியிலிருந்து நரோமா கப்பல் சேவையில் ஈடுபட்டது,

ஈ பி டி பி குழுவினர் சிலர் இக்கப்பலில் பயணம் செய்ய முயன்ற போதும் கூட கடற்படையினரால் இவர்கள் துறைமுகப்பகுதியிலிருந்து

[6ஆம் பக்கம் பார்க்க]

### இனப்பிரச்சினை விவகாரம்

# சந்திரிகாவின் நிலைப்பாட்டிற்கு தொண்டமான் வரவேற்பு

(கொழும்பு)

பிரதமர் சந்திரிகா குமாரணதுங்கஇனப்பிரச்சினைக்கு தீர்வுகாண திடசங்கற்பம் கொண்டிருப்பதை இ. தொ. கா. தலைவர் தொண்டமான் வரவேற்றுள்ளார். பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினையை தீர்க்கவும் அரசியல் ரீதியான வன்முறையை நீக்கவும் சந்திரிகா முயன்றிருப்பது இந்த நாட்டில் ஒரு புதிய அரசியல் கலாசாரம் உருவாகி வருகின்றது என்பதற்கு தெளிவான அறிகுறியாகும் எனவும்.பெருந்தோட்ட தொழிலாளரின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண உதவும் முன்னேற்றகரமான அரசியற் கொள்கைகளுக்கு இ. தொ. கா. எப்போதும் ஆதரவு வழங்கி வந்துள்ளது. அரசியல் அதிகாரம் பொ. ஐ. முக்கு கைமாற்றப்பட்டு பெரும்பான்மையான மக்களின் ஆதரவு பெற்ற அரசு அமைய சுமுக

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பொ. ஐ. மு. பக்கம் சாயும் இ. தொ. கா. தலைமை

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பக்கம் சாயும் அறிகுறி தென்படுவதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

பொது ஜன ஐக்கிய முன்னணியின் வெற்றிக்கு வாழ்த்து தெரிவித்து இ- தொ. கா. தலைவர் சௌமிய மூர்த்தி தொண்டமான் விடுத்துள்ள செய்தி இச் சந்தேகத்தை ஏற்படுத்துவதாக அவர்கள் கூறுகின்றனர்-

சந்திரிகா குமாரண துங்காவின் தலைமையில் பொது

[6ஆம் பக்கம் பார்க்க]

# விமானப் படைத் தலைமையகம் இடமாற்றம் செய்யப்பட்டது

## புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி நடவடிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகக் கூடும் என்ற அச்சத்தால் கொழும்பு தும்முல்ல சந்தியில் இருந்த விமானப் படைத் தலைமையகம் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையில் அமைந்துள்ள 12வது பிரிகேட் இராணுவத் தலைமையகத்திற்கு மாற்றப் பட்டுள்ளது.

இதையடுத்து கொழும்பு நகரின் பாதுகாப்பிற்கு பொறுப்பான 12 வது பிரிகேட் இராணுவ தலைமையகம் கொள்ளுப்பிட்டிக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது. இதே வேளை கொழும்பு கிறகரிஸ் வீதியில் இருக்கும் தேசிய புலனாய்வு பணியகத்தின் தலைமையகத்தையும் இடம் மாற்றும்படி அதற்கு அருகிலுள்ள வெளிநாட்டுத் தூதுவராலயமொன்று வெளிநாட்டு அமைச்சின் மூலமாகக் கோரிக்கை விடுத்துள்ளது. எனினும் தேசிய புலனாய்வு பணியகத்தின் தலைமையகத்தை இடம் மாற்றுவதற்கு பொருத்தமான இடம் கிடைக்கவில்லை என்று பாதுகாப்பு அதிகாரிகள் கூறியுள்ளனர்.

### புளொட்டும் ஆதரவு

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு புளொட் குழுவும் நிபந்தனையற்ற ஆதரவு வழங்க முன்வந்துள்ளது.

வன்னி மாவட்டத்தில் புளொட் குழு 3 இடங்களைப் பெற்றுள்ளமை தெரிந்ததே.

# பிரேமா கொலையை விசாரிக்க விசாரணைக்குழு அமையும்

## ஹேமா பிரேமதாசா வரவேற்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொலை குறித்து, விசாரிக்க விசாரணைக் குழு அமைக்கப்படும் என பிரதமர் சந்திரிகா கூறியதற்கு ஹேமா பிரேமதாசா வரவேற்பு தெரிவித்துள்ளார்

எனது கணவர் கொலை குறித்து விரிவான விசாரணை நடத்துமாறு நான் ஐதேக அரசை கோரிவந்தேன் ஆனால் எனது கோரிக்கைக்கு அது செவிசாய்க்கவில்லை. புதிய பிரதமரின் இவ்வறிவிப்பை நான் வரவேற்கிறேன் என ஹேமா பிரேமதாசா மேலும் தெரிவித்தார்

இது குறித்து எமது குடும்பத்தவர் நன்றியுடைவர்களாக இருப்பர் எனவும் அவர் தெரிவித்தார்

## மலேசியாவை ஒத்த வெளியுறவுக் கொள்கை

### வெளியுறவு அமைச்சர் கதிர்காமர்

(கொழும்பு)

புதிய அரசின் வெளியுறவுக் கொள்கை மலேசியாவின் கொள்கை போன்று அமையும் என புதிய வெளியுறவு அமைச்சர் லஷ்மன் கதிர்காமர்தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இந்தியாவுடனான உறவு மலேஷிய - இந்திய வெளியுறவு போன்று அமைந்திருக்கும் எனவும் கதிர்காமர் தெரிவித்துள்ளார்-

## இந்திய இலங்கை உறவுகள் நெருங்கி இருக்கின்றன

### கொழும்பிலுள்ள இந்திய தூதுவர்

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் அனைத்து துறைகளிலும் நெருங்கிய ஒத்துழைப்பு தொடர்ந்து வருகிறது. இது இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய நட்புறவைப் பிரதிபலிக்கின்றது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. மாவட்டத்தில் இரு குண்டுகள் வெடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு இடங்களில், தேர்தலுக்கு முதல் நாளான திங்கட்கிழமையன்று நள்ளிரவு வேளையில் குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்றன.

மட்டக்களப்பு நகரிலிருந்ல் சுமார் நான்கு மைது தொலைவிலுள்ள குறிஞ்சாமுனையிலும், ஏறாவூர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### இறைச்சிக்கோழி

புறொயிலர்கள், சேவல்கள், வளர்ப்புக்கு உகந்த சேவல் குஞ்சுகள், 2 மாத, 3 மாத பேட்டுக்குஞ்சுகள் விற்பனையாகிறது. வியாபாரிகளுக்கு விலைக்கழிவு உண்டு. யாழ்ப்பாணவீதி, உரும்பிராய்ச்சந்தி. (9144)

### ஜெனரேற்றர் விற்பனைக்கு

மூன்று பேஸ் (PHASE) 50 கிலோவாற் ஜெனரேற்றர் 110 குதிரைச் சக்தி எஞ்ஜினுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு- '' மில்க்வைற் '' (சி-10151)

### தவறிவிட்டது

மங்களவதனி குணரத்தினம் ஆகிய எனது 688280 087V இலக்கம் கொண்ட அடையாள அட்டையும் பயிற்சி நெறிக்குரிய அடையாள அட்டையும் 3-8-94 அன்று கிளாலிக்கரையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (9162)

### மெய்வல்லுனர் விண்ணப்பம்

யாழ்- மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுனர் சங்கம் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 09-10-11 ஆம் திகதிகளில் நடத்தவிருக்கும் கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவு தினம் இம்மாதம் 31 ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட பாடசாலைகள் மற்றும் கழகங்களைச் சேர்ந்த 18,20 வயதுக்கு உட்பட்ட ஆண், பெண் மெய்வல்லுனர்கள் இப்போட்டிக்கு விண்ணப்பிக்கலாம். மெய்வல்லுனர்கள் தனிப்பட்ட முறையிலும் போட்டிகளில் பங்குபற்ற முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### திட்டமிட்டபடி பரீட்சை

(யாழ்ப்பாணம்)

## 45-ம் நாள் நினைவலைகள்



**கப்டன் எழில்வாணன்| ரவீந்தர்**
(கறுப்பையா சின்னக்குமார்)
புகையிரத நிலைய வீதி செட்டிகுளம்

தாயின் மடியில்: 1974 - 02 - 03
தாயக மண்ணில்: 1994 - 07 - 09

தேசத்தின் விடிவிற்காய் தென்றலாய் புயல் வீசும் வேளையிலே இரத்த வெறிபிடித்த காடையரை கொன்றொழிக்க என ஈரேழு வயதினிலே தலைவர் வழி சென்றீரே. நாட்டிற்கு நல்லவனாயும் களத்திற்கு வீரனாயும் சிநேகிதர்களுக்கு உத்தமனாயும் மக்கள் முன் பண்பாகவும் இருந்த நீர், போர் முனைகளிலே வல்லரசுக் காடையருடன் போராடி விழுப்புண் அடைந்து இருந்தீரே பின் வீரமிகு தோழர்களுடன் வீரமுடன் பூநகரி கூட்டுப்படைத்தளம் தகர்க்கவென சென்று பூத்த முகத்துடன் வெற்றியுடன் திரும்பினீரே களங்கள் பல கண்ட உன்னை இருபது வயதினிலே இறுதியாக வவுனியா போர் முனையில் போராடும் போது இயமன் கூட்டிச் சென்றதுவே - சோதரனே எங்கு நீ சென்றாயோ எம்மவர்க்கே தெரியவில்லை.

உன் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கின்றோம்.

செந்தூர் குடும்பத்தினர்
கிளிநொச்சி. (9159)

## 31-ம் நாள் நினைவலைகள்



மலர்வு: 15 - 09 - 1940
உதிர்வு: 23 - 07 - 1994

திருமதி
**உமாதேவிப்பிள்ளை யோகராசா**

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

சிவன் கோவிலடி, வல்வெட்டித்துறை. 9161)
நினைவு கூரும் குடும்பத்தவர்

## 90-ம் நாள் நினைவு



**திருமதி சிவகுரு இலட்சுமி**

பிறப்பு 10-11-1934
இறப்பு 25-05-1994

அன்பின் உருவாய் ஆதரவளித்து
என்பும் எமக்காய் உருக்கி
துன்பம் நீக்க துணையானவளே
இன்று நீயில்லை துன்பமாயினோம்

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன்:- சின்னையா சிவகுரு.
பிள்ளைகள்:- மங்கையற்கரசி, கிருபாகரன் (சுவிஸ்), கிருபானந்தன் (U K), கிரிதரன் (ஹாட்லிக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன்)
மருமகன்:- புஸ்பநாதன் (சுவிஸ்)
பேரப்பிள்ளைகள்:- ஜெய கௌரி, நிறாஞ்சன், உதயசங்கர், தாட்சாயினி.

'மங்கள கிரி, செம்பாடு, கரணவாய்மத்தி. (9151)

## நரோமா பயணிகளுக்கு வீண் சிரமங்கள்

(யாழ்ப்பாணம்)

ஐந்து மணித்தியாலங்களாக திருகோணமலை துறைமுகத்தில் காத்துக்கிடக்க வேண்டிய நிலை நரோமா பயணிகளுக்கு ஏற்பட்டது.


நேற்று முன்தினம் யாழ்ப்பாண பயணிகள் நரோமா கப்பலில் பயணம் செய்வதற்காக திருகோணமலை துறைமுகத்தில் காலை பத்து மணியில் இருந்து பிற்பகல் மூன்று மணிவரை காத்துக் கிடந்தனர்.

திருகோணமலையில் பிற்பகல் 12.00 மணியில் இருந்து ஊரடங்கு அமுல் படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டு பின்பு அது பிற்பகல் ஆறு மணியில் இருந்தே அமுல் படுத்தப்படும் என்று கப்பல் படையால் அறிவிக்கப்பட்டதால் பயணிகள் துறைமுகத்தில் தாமதிக்க வேண்டி ஏற்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இடமாற்றம்

தெல்லிப்பழை தொலைக் கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் பயிற்சி நெறிக்குரிய வகுப்பு யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் க. பொ. த உயர் தர வகுப்புப் பரீட்சை நடைபெறுவதால் அங்கு நடைபெறமாட்டாது. பதிலாக இன்று முதல் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை யா/மகாஜனாக் கல்லூரியில் நடைபெறும். மாணவர்களை சமுகமளிக்கும்படி சிரேஷ்ட போதனாசிரியர் வேண்டுகின்றார்.

## 4-ம் ஆண்டு நினைவாக...



மலர்வு: 01- 03 1967
உதிர்வு: 22- 08 1990

**சே. மணிவண்ணன்**

மணிவண்ணன் உன்னை
'ஹெலி'யாகி வந்த
இயமன்
பலியெடுத்தானே.....
உன் நினைவுகள்
ஈரமாக நெஞ்சில்
கசிகின்றன. ...
மனசுக்குள் என்றும்
'மணி' ஒலித்துக் கொண்டேயிருப்பாய்!

'மணி இல்லம்' மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
தாய், தம்பிமார், அன்ரி, மாமா
(சி-10161)

## நினைவு கூருகின்றோம்...

(யாழ்ப்பாணம்)

இரண்டாம் கட்ட கல்விப் பொது தராதர (உ/தர) பரீட்சையின் இரண்டாம் கட்டப் பரீட்சைக்கான வினாத்தாள்கள் நேற்று யாழ். கல்வித் திணைக்களம் வந்து சேர்ந்தன.

விமானமூலம் பலாலிக்கு எடுத்துவரப்பட்ட இவ் வினாத்தாள்கள் ''நரோமா'' கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு எடுத்துவரப்பட்டு யாழ். கல்வித் திணைக்களம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதற்கான பரீட்சைகள் இன்று திட்டமிட்டபடி யாழ். மாவட்டத்தில் ஆரம்பமாகுமென யாழ். வலயம்-1 இன் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (பா, தி, யோ)

## சம்பளக் கொடுப்பனவு

சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான ஆகஸ்ட் மாதச் சம்பளம் எதிர்வரும் 23-ம் 24-ம் திகதிகளில் யாழ்ப்பாணம் வர்த்தக வங்கியில் வைத்து காலை 9 00 மணியில் இருந்து நண்பகல் 12 00 மணிவரை வழங்கப்படவுள்ளதென சீமெந்துக் கூட்டுத்தாபனக் கணக்காளர் திரு: க. மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

## உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்றோட்டரக்ற் கழகம் எஸ். எம். பெர்னாண்டோ நிறுவன ஆதரவில் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. இப்போட்டியில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து இளவாலை யங்கென் றீஸ் அணி மோதவுள்ளது. இவ் ஆட்டம் 90 நிமிடம் நீடிக்கும்

---

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### சந்தியாப்பிள்ளை இராசம்மா

மலர்வு : 16-09 1924 உதிர்வு: 22-08-1993

நீதியும், கருணையும் கொண்ட விண்ணகத் தந்தையே! எம்மனதில் என்றும் நிலைத்திருக்கும் உமது அடியாளின் ஆன்மாவை ஏற்றருளும். இவர் செய்த குறைகளைப் பொருட்படுத்தாது இவரது, நற்செயல்களைக் கண்ணோக்கி இவர் எதிர்பார்த்த முடிவற்ற பேரின்ப வாழ்வை இவருக்கு அளித்தருளும்' ஆமென்.

இவரது ஆன்ம சாந்திக்காகத் தொடர்ந்து இறைவனை வேண்டும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

தபாற்கந்தோர் எதிர்,
கரவெட்டி.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(9160)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு: 19 – 07 – 1974

மறைவு: 23 – 07 – 1994

### கனகு கஜபாலினி

[A/L மாணவி முத்துத்தம்பி மகா வித்தியாலயம்]

சுதாகரிக்கும் உன் வதனம்
சுமந்து சென்ற எம் உறவில்
பிரிந்து விட்டதென்ற செய்தி
இருள் படிந்த நாட்களாச்சே
நினைவுகள் நிலைத்திருக்க
நின் ஆத்மா சாந்தி பெறுக.

அன்னாரின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்த யாவருக்கும் இதயம் நெகிழ்ந்த நன்றியை தெரிவிப்பதுடன் இன்று 22 8-1994 திங்கட்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

91/11 காரைநகர் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்

(9171)

---

## 22. 08. 1994 .

1989-ம் ஆண்டு இதேதினத்தில் மட்டு- வட்டமடுப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**ரவி** (பொன்னையா விஜயராஜ் - தம்பிலுவில் 01- அம்பாறை)

திருமலை - மேன்காமம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் நடேஸ்** (இ. திலகரத்தினம் - தம்பலகாமம் -திருமலை)

**மீசைராஜா** (குழந்தைவேல் ராஜா - கிளிவெட்டி- திருமலை)

1990-ம் ஆண்டு மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சசியன்** (அந்தோனிப்பிள்ளை ஜோன் - ஆறுமுகத்தான்குளம், குமுழமுனை - மணலாறு)

ஊர்காவற்துறையில் உலங்குவானூர்திகள் மூலம் தரையிறக்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். சாந்தன்** (சின்னத்துரை சிவலிங்கம்- 1-ம் வட்டாரம் - புங்குடுதீவு)

**நிசாந்தன்** சுப்பிரமணியம் மாணிக்கம் - 3-ம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு)

மாவிட்டபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சேனாதி** (செல்லக்கண்டு ஜெயச்சந்திரன்-சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி - யாழ்)

1991-ம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விழுப்புண்ணடைந்திருந்து சிகிச்சையின்போது வீரச்சாவெய்திய,

**அமலன்** (தம்பிராசா சிவகணேஸ்- பாலையூற்று- திருமலை)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்.

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10160)

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்

# கணிதம் O/L




தமிழீழ பொதுக் கல்வித் தேர்வுப் பரீட்சையை முடித்திருக்கும் மாணவர்கள் இன்னும் 3 மாத காலத்திலே ஒரு பொதுப் பரீட்சை ஒன்றை சந்திக்க விருக்கிறீர்கள். நடைபெற்று முடிந்த தமிழீழப் பொதுக் கல்வித் தேர்விலே முழுப்பாடத் திட்டத்தையும் உள்ளடக்கிய கணித வினாத்தாளை சந்தித்தீர்கள். வினாத்தாளின் அமைப்புப் பற்றியும், விடையெழுதும் முறை பற்றியும் அறிந்திருப்பீர்கள். க.பொ.த சாதாரணதரப் பரீட்சை வினாத்தாள் அமைப்புப் பற்றி நன்கு விளங்கியிருப்பீர்கள் என எண்ணுகிறேன். பரீட்சை வினாத்தாள் அமைப்பைவிளங்கிஉங்களை நீங்களே தயார்படுத்தினால்கணிதபாடத்திலே சிறந்த பெறுபேற்றை இலகுவாகப் பெற்றுவிடலாம். பரீட்சை ஒன்று முடிந்துவிட்டது. இனி என்ன? என அலட்சியமாக, பயிற்சிகள் செய்யாதுவிட்டால் இதுவே உங்கள் பெறுபேற்றை மாற்றியமைத்துவிடும் கணித பாடத்திலே தொடர்ந்து பயிற்சிகள் செய்து உங்களை தயார்நிலையிலேவைத்திருந்தால்தான் இன்னும் 3 மாதங்களிலே சந்திக்கவிருக்கும் பொதுப் பரீட்சையிலே நல்ல பெறுபேற்றை அடையலாம். எனவே மாணவர் அரங்கு மூலம் உங்களுடன் சிலமாதிரி வினாக்களை பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணுகிறேன். மாணவர்கள் இவ் வினாக்களைச் சுயமாகச் செய்தல் வேண்டும் இதனை நோக்கமாகக் கொண்டு முதலிலே வினாக்களையும், அடுத்துவரும் மாணவர் அரங்கிலே விடையையும் தரலாம் என எண்ணுகிறேன் மாணவர்கள் ஆர்வமாக இவ் வினாக்களையும் இதனுடன் வேறு பயிற்சிகளையும் செய்வீர்களாயின் இனி வரும் பரீட்சையிலே கணிதபாடத்தில் நல்ல பெறுபேற்றைப் பெறுவது திண்ணம்.

வினா 1:

(அ) காரணிப்படுத்துக;- $x^2+x-a^2-a$

(ஆ) தீர்க்க;- $x+2y=3$
$2x+3y=4$

(இ) $x^2-4x+2=0$ எனும் சமன்பாட்டைத் தீர்த்து விடையை இரு தசமதானங்களிற்கு திருத்தமாகத் தருக.

வினா 2:

(அ) $x=4$, $y=27$ எனின் $(2xy)^{-\frac{1}{3}}$ இன் பெறுமதியைக் காண்க.

(ஆ) $2மட_{10}x=\frac{1}{3}மட_{10}125+மட_{10}(2x-5)$ எனும் சமன்பாட்டைத் திருப்தி செய்யும் x இன் பெறுமானங்களைக் காண்க.

(இ) $S = \frac{0.996 \times \sqrt[3]{8.017}}{\sqrt{15.98}}$ ஆயின் S இன் பெறுமதியைக் காண்க.

வினா 3:

ஈராக்கின் பக்தாத் நகரத்தை யாகூவார் யுத்த விமானத்தால் குண்டு வீசியளிக்கவும், பஸ்ரா நகரத்தை மிக் யுத்த விமானத்தால் குண்டு வீசியளிக்கவும், நஸீரா நகரத்தை மிராஜ் யுத்தவிமானத்தால் குண்டு வீசியளிக்கவும் அமெரிக்க தலைமையிலான நேசப் படைகள் தீர்மானிக்கின்றன. இந்நகரங்கள் அழிவதற்கான நேர்தகவுகள் விமானங்கள் குண்டுவீசும் நேர்தகவிலேயே தங்கியுள்ளது.

மிராஜ் குண்டு வீசாமைக்கான நிகழ்தகவு $\frac{3}{5}$ எனவும் மிக் யுத்த விமானம் குண்டு வீசாமைக்கான நிகழ்தகவு 40% எனவும், யாகூவார் யுத்தவிமானம் குண்டு வீசாமைக்கான நிகழ்தகவு 0.2 எனவும் நேசப் படைகளின் பிரதம தளபதி மதிப்பிடுகிறார்.

அ) பக்தாத், பஸ்ரா, நஸீரா ஆகிய ஈராக்கிய மூன்று நகரங்களும் அழிவதுடன் தொடர்புபட்ட நிகழ்ச்சியைக் காட்டும் மரவரிப்படம் ஒன்று வரைக.

ஆ) மரவரிப் படத்தின் துணைகொண்டு பின்வரும் நிகழ்க்சிகளுக்கான நிகழ்தகவைக் காண்க.
1) பக்தாத் நகரம் மட்டும் அழிதல்
2) யாதாவது இரு ஈராக்கிய நகரங்கள் மட்டும் அழிதல்.
3) பஸ்ரா நகரம் மட்டும் அழியாது இருத்தல்
4) குறைந்தபட்சம் ஒரு நகரமாவது அழிதல்

இ) மேலே குறிப்பிட்ட மூன்று ஈராக்கிய நகரங்களும் அழிந்து விட்டால் வளைகுடாவின் ''பாலைவனப் புயல்'' இராணுவ நடவடிக்கைகளுக்கு குறுகிய காலத்தில் தீர்வு கண்டுவிடலாம் எனவும், பாலைவனப் புயல் ராணுவ நடவடிக்கைக்கு குறுகிய காலத்தில் தீர்வு காண்பதில் தமக்கு 80% க்கு மேல் நம்பிக்கையுண்டென அமெரிக்க ஜனாதிபதி கூறினார். இக்கூற்று சரியானதா? பிழையானதா? காரணம் தருக.

வினா 4:

$Y=4+2x-x^2$ இன் வரைபை வரையத் தேவையான x இனதும் Y இனதும் பெறுமதிகளைக் கொண்ட ஒரு பூரணமற்ற அட்டவணை ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

| X | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|---|---|
| Y | -4 | - | 4 | - | - | - | -4 |

(1) அட்டவணையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக. (பெறுமானங்களை எவ்விதம் பெற்றீரெனக் காட்டுக)
(2) வரைபுத்தாளிலே x அச்சு வழியேயும், y அச்சு வழியேயும் ஒரு அலகைக் குறிப்பதற்கு 10 சிறுபிரிவுகளைத் தெரிவு செய்து மேலே தரப்பட்ட சார்பின் வரைபை வரைக.
(3) உமது வரைபின் துணை கொண்டு பின்வருவனவற்றைக் காண்க.
(அ) சார்பின் உயர்வுப் பெறுமானம்?
(ஆ) சமச்சீர்க் கோட்டின் சமன்பாடு?
(இ) சார்பு நேராகவுள்ள x இன் பெறுமான வீச்சு?
(4) நீர்வரைந்த இவ்வரைபுடன் பிறிதொரு நேர்கோட்டு வரைபைப் பயன்படுத்தி $x^2+4x+1=4(x+1)$ எனும் சமன்பாட்டின் மூலங்களைக் காண்க.

ல. சதீஸ்குமார்
ஆசிரியர்
உடுவில் மகளிர் கல்லூரி

வினா 5:

கவராயம், cm/mm அளவுகருவி, நேர்விளிம்புக் கருவி ஆகியவற்றை மாத்திரம் உபயோகித்து அமைப்புக் கோடுகள் யாவையும் தெளிவாகக்காட்டி

(1) $PQ=8.1cm$, $S\hat{Q}P=45°$, $Q\hat{S}P=60°$ ஆகிய அளவுகளையுடைய முக்கோணி PQS ஐ அமைக்க.
(2) இதிலிருந்து நாற்பக்கல் PQRSஐ $RS=7.4cm$ ஆகவும், $Q\hat{R}S=90°$ ஆகவும் இருக்கும்வண்ணம் பூர்த்தி செய்க
(3) பின்வருவனவற்றை அளந்து எழுதுக
(1) RQ (2) $R\hat{Q}S$
(4) நாற்பக்கல் PQRS இன் பரப்புக்குச் சமனான பரப்புடைய முக்கோணி RST ஐ அமைக்க. இங்கு T என்பது நீட்டப்பட்ட RQ மீதுள்ள புள்ளியாகும்.
(5) நீர் செய்த அமைப்பு திருத்தமாகும் என நிறுவுக.

(தொடரும்)

# வர்த்தகம் A/L

## பணச்சந்தை - (MONEY MARKET)

இக்கட்டுரையில் ஒரு நாட்டின் தேவைக்கேற்றவாறுநிதி நிரம்பலை ஏற்படுத்தும் நிதிச் சந்தையில் ஒரு பிரிவான பணச்சந்தை பற்றியதாக அமைகின்றது. இலங்கையில் உள்ள பணச் சந்தையின் உப சந்தைகளான

(1) வங்கிகளுக்கிடையேயான அழைப்புக்கடன் சந்தை- ( Inter Bank Call Loan Money Market )

(2) திறைசேரி உண்டியல்களுக்கான ஆரம்ப சந்தையும், இரண்டாந்தரச் சந்தையும் ( Primary and Secondary Markets for Treasury Bills) சந்தையைப் பிரதிபலிப்பதனால் இலங்கையில் பண சந்தை

(1) அமைக்கப்பட்ட பணச் சந்தை - Organised- Money Market

(2) அமைக்கப்படாதபணச் சந்தை Unorganised Money Market

என இருவகையாக நோக்கப்படுகின்றது.

அமைக்கப்பட்ட பணச்சந்தை என்றால் என்ன? நிறுவன ரீதியாக அமைக்கப்பட்டு செயற்படுகின்ற நிதி நிறுவனங்களை அங்கமாகக் கொண்ட அமைப்பினைக் குறிக்கும். இவற்றின்

### வங்கிகளுக்கிடையேயான அழைப்புக் கடன் சந்தை Inter Bank Call Loan Money Market

அறிமுகம்-

ஆரம்ப காலத்தில் வணிக வங்கிகள்தமது திரவத்தன்மை இன்மைப் பிரச்சினையினை நீக்கிக் கொள்வதற்காக தண்டவீதத்திற்கும், வங்கி வீதத்திற்கும் எதிராக குறுங்காலக் கடன்களை மத்திய வங்கியிலிருந்து பெற்றுக் கொண்டது. ஆனால் இக் குறுங்காலக் கடன்கள் மேலதிக செலவினத்தையும், கால விரயத்தையும் ஏற்படுத்துகின்ற காரணத்தினால் இம்முறையினைத் தவிர்த்துக் கொண்டு அழைப்புச்

நிலைமை வணிக வங்கிகளின் வருமானத்தைப்பாதித்ததினால், குறைந்த வீத வட்டிக்குக் கடன்களைப் பெறுவதற்கு அழைப்புக் கடன் சந்தையை நாட வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

(3) அழைப்புக்கடன் சந்தையில் கடன் எடுப்பதனால் வணிக வங்கிகள் மத்திய வங்கியில் கடன் எடுப்பதைத் தவிர்த்து வணிக வங்கிகள் தமது சுதந்திரமான செயற்பாட்டை உறுதிப்படுத்த விரும்பியமை.

(4) இலங்கை வங்கி, மக்கள்வங்கி போன்றவை பல நவீன வைப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்திப் பெரும் தொகை பணத்தை வைப்பாக ஏற்றன. எனவே தம்மிடம் மிகையாக உள்ள பணத்தை அழைப்புக்கடன் சந்தையில் வணிக வங்கிகளுக்கு கடனாக வழங்கி வருமானம்உழைக்க விரும்பியமை

(5) இலங்கையில் 77-ம்

கடனை வழங்கி வருமானத்தை உழைக்கும் ஓர் முதலீட்டுத் தளமாக செயல்படுதல்.

(3) வங்கிகளுக்கிடையே நிதிப்பாய்ச்சலை ஊக்குவித்தல்.

(4) வணிக வங்கிகள் தற்காலிகமான நிதிப்பிரச்சினையை மேற்கொள்வதற்கு மத்திய வங்கியில் தங்கி இருப்பதைத் தவிர்த்து வணிக வங்கிகளின் சுதந்திரத்தை உறுதிப்படுத்தல்

(5) வணிக வங்கிகள் குறைந்த வீத வட்டிக்குக்கு கடன் எடுக்கும் வசதியை அளித்தல்.

அழைப்புக் கடன்சந்தைக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் வங்கிகளினால் அனுபவிக்கப்படும் அனுகூலங்கள்.

(1) இலகுவாகக் கடன் வசதியைப் பெறல்

(2) இலகுவாக திருப்பிக் கொடுக்கல்.

1991 இறுதியில் 13%-27% மாக அதிகரித்து.

1992 ஓகஸ்ட் 15%- 19% மாக வீழ்ச்சியடைந்து.

1992 இறுதியில் 10%-32% மாக விரிவடைந்தன.

ஆனால் 1993ம் ஆண்டில்
1993 - ஜனவரி10% -32%
1993 மார்ச் 3%- 20% வீழ்ச்சி
1993 மே 15%-35% அதிகரிப்பைக் காட்டியது.

★ 1993ம் ஆண்டின் ஒக்டோபர் மாதம் திறைசேரி உண்டியல்களுக்கான மீள் கொள்வனவுச் சந்தை அறிமுகப் படுத்தியதுடன் அழைப்புப் பணச் சந்தை வீதங்கள் 14%- 23%- மாக ஓர் குறுகிய வீழ்ச்சி காணப்பட்டது.

மேற்படி புள்ளிவிபரங்கள்படி 1992-ம் ஆண்டை விட 1993-ம் ஆண்டின் பணச்சந்தையின் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

1-ம் தர திறைசேரி உண்டியல் சந்தையின் புள்ளி விபர ரீதியான தொழிற்பாட்டுப் போக்கு

★ 1-ம் தரச் சந்தையில் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியலின் மொத்தப் பெறுமதி
1992 - 193 .8 பில்லியன்
1993 - 159. 9 பில்லியன்

★ வரவு செலவுத்திட்ட நோக்கத்திற்காக வழங்கப்பட்ட புதிய வழங்கல்கள்
1993 - 13. 6 பில்லியன். இது 1992 - ம் ஆண்டைவிட 0. 5 பில்லியன் வீழ்ச்சியாகும்.

★ 1993 - ம் ஆண்டின் கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் 3. 5 பில்லியன் ரூபா

★ இதன்படி வெளிநின்ற மொத்த திறைசேரி உண்டியல்கள்
1992 - 87. 1 பில்லியன்
1993 - 97. 2 பில்லியன்

★ மத்தியவங்கி வசமிருந்த திறைசேரி உண்டியல்கள்

(2) திறைசேரி உண்டியல்களுக்கான ஆரம்ப சந்தையும், இரண்டாந்தரச் சந்தையும் (**Primary and Secondary Markets for TreasuryBills**)

(3) உள்ளூர் அன்னியச் செலவாணிச் சந்தை (**Inter Foreign Exchange-Market**)

(4) கரைகடந்த வங்கிச் சந்தை (**Off Shore-Market**)

(5) மறு அல்லது மீள் கொள்வனவுச் சந்தை (**Re-Purchase Market**)

ஆகிய ஐந்து சந்தைகளையும் பின்வரும் தலையங்கங்களில் விளக்கியுள்ளேன்.

(1) அறிமுகம்
(2) துரித வளர்ச்சிக்கான காரணங்கள்
(3) அதன் குறிக்கோள்கள்
(4) அதன் அனுகூலங்கள்
(5) இன்று (1993) அதன் தொழிற்பாட்டுப்போக்கு

ஒவ்வொரு சந்தை அமைப்புக்களையும் விரிவாக ஆராய்வதற்கு முன்னர் ஒரு முயற்சியாளன் (உற்பத்தியாளர், தொழில் முனைவோர் வர்த்தகர்) தனது நிதித்தேவையினை பின்வரும் இரண்டு அடிப்படையில் தீர்த்துக் கொள்வான் அதாவது நாட்டின் நிதிநிரம்பலை ஏற்படுத்தும் நிதிச் சந்தையில் இருந்து குறுங்காலக் கடன்களைப் பெறுவதன் ஊடாகவும் நீண்டகாலக் கடன்களைப் பெறுவதன் ஊடாசவும் அந்த வகையில்

**பணச் சந்தை** என்றால் என்ன? குறுங்காலக் கடன்களை வழங்குகின்ற நிறுவனங்களை உள்ளடக்கிய சந்தையாகும். அதாவது உற்பத்தியாளர், தொழில் முனைவோர், வர்த்தகர்கள் போன்றோரின் தேவைகளுக்கு ஏற்றவாறு குறுங்கால நிதிவசதியளிக்கும் நிறுவனங்கள் யாவும் பணச்சந்தைஎனஅழைக்கப்படும்எந்தஒரு நாட்டிலும்வணிகவங்கிகளே இவ்வித குறுங்காலக் கடன் வசதியளிக்கும் அமைப்புகளாகும்

பணச்சந்தையின்வகைகள்

இலங்கையின் பணச்சந்தை ஓர் வளர்முக நாட்டின் பணச் என்றால் என்ன? நிறுவன ரீதியாக அமைக்கப்பட்டு செயற்படுகின்ற நிதி நிறுவனங்களை அங்கமாகக் கொண்ட அமைப்பினைக் குறிக்கும். இவற்றின் செயற்பாடுகள் யாவும் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட திட்டமிடலுக்குஅமையக் காணப்படும். பொதுவாக வணிக வங்கிகள், நிதிநிறுவனங்கள், கழிவகங்கள், ஏற்பகங்கள் போன்றவற்றைக் குறித்து நிற்கும்

**அமைக்கப்படாதபணச்சந்தை** என்றால் என்ன? நிறுவன வகை அற்றதும், சட்டக் கட்டுப்பாட்டிற்கு உட்படாததுமான தனிநபர்கள் வழங்கும் குறுங்காலக் கடன் நடவடிக்கைகளையே இதுகுறித்து நிற்கும். வளர்முக நாடுகளில் கிராமப்புறங்களில் நிதிநிறுவனங்கள் பெருமளவுக்கு வளர்ச்சியடையாத காரணத்தினால் அமைக்கப்படாத பணச் சந்தை பெருமளவில் காணப்படுகின்றன. கிராமப்புறங்களில் காணப்படும் அடைவு பிடிப்போர், செட்டிமார், கடன் கொடுப்போர் போன்றவர்கள் அங்கம் வகிக்கும் அமைப்பினைக் குறிக்கும்

அமைக்கப்படாத பணச் சந்தையின் தற்போதைய பின்னடைவு

இச்சந்தை அமைப்பானது கிராமத்து ஏழை விவசாயிகளை சுரண்டி இவர்களைப் பரம ஏழைகளாக்கி வந்தன. இந்நிலையை மாற்ற இன்று கிராமப்புறங்களிலும் கிராமிய வங்கிகள், மக்கள்வங்கி, இலங்கை வங்கிக்கிளைகள், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் பரவலாக உருவாக்கப்பட்டு வருகின்றன. இதனால் கிராமப்புறங்களில் அமைக்கப்படாத பணச்சந்தையின் முக்கியத்துவம் குறைவடைந்து வருகின்றது, குறிப்பாகமக்கள்வங்கியின் அடைவு பிடிக்கும் திட்டம் அறிமுகமாகியதுடன் கிராமப் புறங்களில் அமைக்கப்பட்ட பணச் சந்தை உருவாக வழிவகுத்தது. இனி ஒவ்வொரு பணச்சந்தையையும் தனித்தனியாக நோக்குவோம்.

ஆனால் இக் குறுங்காலக் கடன்கள் மேலதிக செலவினத்தையும், கால விரயத்தையும் ஏற்படுத்துகின்ற காரணத்தினால் இம்முறையினைத் தவிர்த்துக் கொண்டு அழைப்புக் கடன் பெறமுற்பட்டனர். இந்த வகையில்,

வங்கிகளுக்கிடையிலான அழைப்புக் கடன் சந்தை என்றால் என்ன?

வணிக வங்கிகள் திரவத்தன்மை இன்மை பிரச்சினையை எதிர்நோக்கும் போது மிகைத்திரவத்தன்மை உள்ள இன்னோர் வங்கி குறுங்காலக் கடன்களை வழங்குவதன் ஊடாக நிவர்த்தி செய்யும் முறையை கருதும். கடன்களை வழங்கிய வங்கி அதனை திருப்பி அழைத்தவுடன் இக் கடனை எடுத்த வங்கி இதனை திருப்பி செலுத்த வேண்டியிருப்பதனால் இக்கடன்கள் **அழைப்புக் கடன்** எனவும், இவற்றை செயற்படுத்தும் சந்தை **அழைப்புக்கடன்** சந்தை எனவும் இக் கடன் மீது அறவிடப்படும் வட்டி **அழைப்புக்கடன்** வட்டி எனவும் அழைக்கப்படும். இலங்கையில் பெரும் அளவிற்கு வணிக வங்கிகளே அழைப்புக் கடன் வழங்கும் தொழிற்பாட்டில் ஈடுபடுகின்றன. சில சந்தர்ப்பங்களில் தேசிய சேமிப்பு வங்கியும் தேசிய அபிவிருத்தி வங்கியும் இதில் பங்கு கொள்கின்றன.

அழைப்புக் கடன் சந்தை துரிதமாக வளர்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் (1977ன் பின்னர்)

(1) மத்தியவங்கி வணிக வங்கிகளுக்குக் கடன் வழங்குவதற்கு தயக்கம் காட்டியமையால் அழைப்புக் கடன் சந்தையில் வணிக வங்கிகள் கடன்களைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டது.

(2) சாதாரண தேவைகளுக்கு மத்திய வங்கி வழமையான வங்கி வீதத்தில் கடன்களை வழங்கிய போதும் மேலதிக தேவைகளுக்குத் தண்டனை விகிதத்தில் கடன்களை வழங்கியது. இந் தம்மிடம் மிகையாக உள்ள பணத்தை அழைப்புக்கடன் சந்தையில் வணிக வங்கிகளுக்கு கடனாக வழங்கி வருமானம்உழைக்க விரும்பியமை

(5) இலங்கையில் 77-ம் ஆண்டின் பின் பிற நாட்டு வணிக வங்கிகளின் கிளைகள் கூடுதலாக தாபிக்கப்பட்டன. இவ் வங்கிகள் நாட்டில் பரவலாகக் கிளைகளை ஸ்தாபித்து வைப்புக்களை ஏற்றமையினால் நிதிப் பிரச்சினையை பெருமளவில் எதிர் நோக்கின. எனவே அழைப்புக்கடன் சந்தையில் இவ் வங்கிகள் பெருமளவில் கடன்களை எடுக்க முன் வந்தன,

னால் அனுபவிக்கப்படும் அனுகூலங்கள்.

(1) இலகுவாகக் கடன் வசதியைப் பெறல்
(2) இலகுவாக திருப்பிக் கொடுத்தல்.
(3) தேவைக் கேற்றவாறு கடன் வசதியைப் பெறல்
(4) கடன் கொடுக்கும் வங்கி வட்டி வருமானத்தை உழைத்தல்.
(5) கடன் கொடுக்கும் வங்கி தனக்கு நிதித்தேவை ஏற்படும் சந்தர்ப்பத்தில் உடனடியாகப் பணத்தை திருப்பிப் பெற்றுக் கொள்ளல்
(6) வங்கிகளுக்கே கடன் வழங்கப்படுவதனால் வழங்கிய கடன் திருப்பிப் பெறப்படுதல் உறுதிப்படுத்தப்படுகின்றது.


## திரு. க. சத்தியதாசன்

(ஆசிரியர்)

கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகாவித்தியாலயம்

காரைநகர்.


(6) தாராள பொருளாதாரக் கொள்கையின் பிரதிபலனாக தனியார்துறை முதலீடுகள் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டமையினால் வணிகவங்கிகள் இவர்களுக்கு கடன்களைப் பெருமளவில் வழங்கின. இதனால் திரவப்பிரச்சினையை எதிர் நோக்கிய வணிக வங்கிகள் அமைப்புக் கடன் சந்தையில் கடன்களைப் பெற பெரும் அளவில் முன் வந்தன.

(7) 1979-ம் ஆண்டு பணத்தரகு நிறுவனங்கள் தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து அழைப்புக் கடன் சந்தையின் தொழிற்பாடு திட்டமிட்டு வழிநடத்தப்பட்டது.

அழைப்புக் கடன் சந்தையின் குறிக்கோள்கள்

(1) நிதிப்பிரச்சினையை எதிர் நோக்கும் வங்கிகளுக்கு, ஏனைய வங்கிகளிடம் இருந்து கடன் எடுக்கும் வசதியை அளித்தல்.

(2) நிதி மிகைப் பிரச்சினையை எதிர் நோக்கும் வங்கிகள், நிதிப்பற்றாக் குறை பிரச்சினையை எதிர் நோக்கும் வங்கிகளுக்கும்

(7) நிதித் தேவைகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் மத்திய வங்கியில் கூடிய வட்டிக்குக் கடன் எடுப்பது தவிர்க்கப்படுகின்றது.

(8) நிதிப் பிரச்சினையை தீர்ப்பதற்கு வணிக வங்கிகளினால் கடன் எடுக்கப்படுவதனால் மத்திபவங்கியில் தங்கி இருக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. இதனால் வணிக வங்கிகளின் சுதந்திரமான செயற்பாடு உறுதிப்படுத்தப்படுகின்றது.

இன்று (1993) அழைப்புக் கடன் சந்தையின் தொழிற்பாட்டுப் போக்கு

★ 1993ம் ஆண்டின் வங்கிகளுக்கிடையிலான அமைப்புக் கடன்கந்தையின் மொத்தப் புரள்வு 81 சதவீதத்தினால் (1,678,250 இலட்சம் ரூபாய்) அதிகரித்தது.

★ 1993ம் ஆண்டில் நியதி ஒதுக்கு விகிதம் பலதடவைகள் மேல் நோக்கி திருத்தப்பட்டுள்ளமை உயர்ந்த கேள்வியை ஏற்படுத்தியது. இதன்படி,

படி 1992-ம் ஆண்டை விட 1993-ம் ஆண்டின் பணச்சந்தையின் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

**(2) திறைசேரி உண்டியல்களுக்கான ஆரம்பச் சந்தையும்,இரண்டாம் தரச் சந்தையும்**

**Primary and Secondary Markets for Treasury Bills**

அரசாங்கம் தனக்கு தேவையான உள்நாட்டு நிதியை குறுங்காலத்தில் ஈட்டிக் கொள்வதற்கான ஒரு சாதனமே திறைசேரி உண்டியலாகும். இவை ஓர் நிலையான வட்டி வீதத்தையும்3 அல்லது 6 மாதகால முதிர்வினைக் கொண்டதாகும்.

திறைசேரி உண்டியல் என்றால் என்ன? என்பதற்கான வரைவிலக்கணமாக-> குறித்த திகதியில் பணம் மீளத் தரப்படுமென அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாக்குறுதிப் பத்திரங்கள் திறைசேரி உண்டியல்கள் என அழைக்கப்படும். இது 1923ம் ஆண்டின் 8-ம் இலக்கம் உள்ளூர்த் திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் படி இலங்கையில் செயற்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

1-ம் தரத் திறைசேரி உண்டியல் சந்தை
**Primary Markets for Tresury Bills**

அரசாங்கத்தினால் வெளியிடப்படும் திறைசேரி உண்டியலினை மத்தியவங்கியானது பகிரங்கச் சந்தையில் கொள்வனவு செய்யும் இவ்வாறு அரசாங்கத்திடமிருந்து மத்தியவங்கியினால் கொள்வனவு செய்யப்படுகின்ற திறைசேரி உண்டியலினையே 1-ம் தர திறைசேரி உண்டியல் என அழைக்கப்படும். இவ் உண்டியலை அடிப்படையாகக் கொண்டு கொடுக்கல் வாங்கல் மேற் கொள்ளும் பணச் சந்தையினை திறைசேரி உண்டியலுக்கான 1- ம் தரச் சந்தை என அழைக்கப்படும்.

மொத்த திறைசேரி உண்டியல்கள்
1992 - 87. 1 பில்லியன்
1993 - 97. 2 பில்லியன்

★ மத்தியவங்கி வசமிருந்த திறைசேரி உண்டியல்கள்
1992 - 21. 8 பில்லியன்
1993 - 3. 9 பில்லியன்

★ வங்கியல்லாத தனியார் துறையின் திறைசேரி உண்டியல் உடைமைகள்
1992 - 43. 6 பில்லியன்
1993 - 63. 7 பில்லியன்
(இது கவர்ச்சி கரமான விளைவுகளினால் தூண்டப்பட்டதன் விளைவாக ஏற்பட்டது)

★ திறைசேரி உண்டியல் மீதான முதலீடு
1992 - 14 1 பில்லியன்
1993 - 20. 1 பில்லியன்
(இதன் முதன்மை முதலீட்டாளர் தேசியசேமிப்பு வங்கி)

★ வர்த்தக வங்கிகளினால் கொள்வனவு செய்யப்பட்ட திறைசேரி உண்டியல்கள்
1992 - 22. 8 பில்லியன்
1993 - 49. 6 பில்லியன்

**திறைசேரி உண்டியல்களுக்கான இரண்டாம் தர சந்தை**

**Secondary Markets for Treasury bills**

திறைசேரி உண்டியல்களுக்கான இரண்டாம் தரச் சந்தை என்றால்? மத்திய வங்கிதான் திறைசேரியிடமிருந்து கொள்வனவு செய்யும் திறைசேரி உண்டியல்களை வணிக வங்கிகளுக்கும், பொது மக்களுக்கும் மீள விற்பனை செய்யும் சந்தையே திறைசேரி உண்டியல்களுக்கான இரண்டாம் தரச் சந்தை என அழைக்கப்படும். இது துணைச் சந்தை எனவும் அழைக்கப்படும்.

இத்திறைசேரி உண்டியல்களுக்கான 2-ம் தரச் சந்தையில் முதலில் மத்திய வங்கிதான் திறைசேரியிடமிருந்து கொள்வனவு செய்த உண்டியலை வணிக வங்கிகளுக்கும், பொது மக்களுக்கும்விற்பனை செய்யும் பின்னர் தான் பெற்ற உண்டியல்களைஇச்சந்தையில்விற்பனை செய்யும் இவ்வாறு திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்

[4-ம் பக்கம் பார்க்க]

# வர்த்தகம்

வோர் அவற்றினை முதிர்ச்சிக் காலத்திற்கு முன் பணம் தேவைப்படின் இவற்றை இச்சந்தையில் மீள் விற்பனை செய்து பணத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

திறைசேரி உண்டியல்களுக்கான இரண்டாம்தரச் சந்தையின் அனுகூலங்கள்:-

1) திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்வோர் அவற்றின் முதிர்ச்சிக் காலத்திற்கு முன்பே அவற்றை விற்பனை செய்யக் கூடிய வாய்ப்பு அளிக்கப்படுவதினால் திறைசேரி உண்டியல்களின் நிதித்தன்மை அல்லது திரவத்தன்மை அதிகரிக்கின்றது.

2) திரவத் தன்மை அதிகரிப்பதனால் கூடுதலானவர்கள் இவற்றைக் கொள்வனவு செய்ய முன்வருவார்கள்.

3) இவ்வாறு பலரும் கொள்வனவு செய்யும் போட்டியிருப்பதனால் கூடுதலான வட்டியை அனுபவிக்கும் வாய்ப்பு

4) மத்தியவங்கி திறைசேரி உண்டியல்களை வணிக வங்கிகளுக்கும், பொதுமக்களுக்கும் பெரும் அளவில் இச்சந்தையில் வீற்பனை செய்யப்படுவதனால் கூடுதலான பணத்தை சேர்க்கலாம்.

5) மத்திய வங்கி திறைசேரியிடம் கொள்வனவு செய்யும் உண்டியல்களை இச்சந்தையில் பலருக்கும் விற்பனை செய்வதனால் தனது நிதிப் பொறுப்பைக் குறைக்கக் கூடியதாக இருக்கின்றது.

6) திறைசேரி உண்டியல்களை இச்சந்தையின் ஊடாக விற்பனை செய்வதனால் பணநிரம்பலின் அடிப்படையில் பொருளாதாரத்தின் மீது கூடிய கட்டுப்பாட்டை ஏற்படுத்தக் கூடியதாக அமைகின்றது,

இரண்டாம்தர திறைசேரி உண்டியல் சந்தையின் தொழிற்பாட்டுப் போக்கு

★ இரண்டாம்தரதிறைசேரி உண்டியல்களின் விற்பனை

1992-ம் ஆண்டு - 119.4 பில்லியன்

1993-ம் ,, - 94.8 பில்லியன்

★ இரண்டாம் தர திறைசேரி உண்டியல்களின் கொள்வனவு

1992-ம் ஆண்டு - 49 6 பில்லியன்

1993-ம் ,, 46.9 பில்லியன்

(3) உள்ளூர் அந்நிய செலாவணிச் சந்தை:

வதிவற்றோரும் (பிறநாடுகளில் தற்காலிகமாக வாழும் இலங்கையர்களும் இலங்கையில் தற்காலிகமாகவாழும்பிறநாட்டவர்களும்) பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவிற் குட்பட்ட முதலீட்டாளர்கள், மத்திய வங்கியினால் அனுமதிக்கப்படுபவர்கள் நாங்கள் அங்கீகரிக்கப்பட்டவெளிநாட்டு நாணய அலகுகளில் (அமெரிக்க டொலர், ஸ்ரேலிங் பவுண், ஜேர்மன் மார்க், சுவீஸ் பிராங், பிரான்சிய பிராங், யப்பான் யென், அவுஸ் - டொலர்.சிங்கப்பூர் டொலர்) நிலையான வைப்பு, சேமிப்பு வைப்பு கணக்கின் ஊடாக இக்கணக்கினை ஆரம்பிக்க முடியும்.

வதிவுள்ளோர் அந்நிய நாணயக் கணக்கு

**[Resident Foreign Currency] RFC**

இலங்கையில் வாழும் இலங்கையர்களும், இலங்கையில் வாழும் பிறநாட்டவர்களும் மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட அந்நிய நாணயங்களில்(அமெரிக்க டொலர் ஸ்ரேலிங்பவுண்,டச்சு மார்க், பிரான்ஸ் பிராங், சிங்கப்பூர் டொலர், அவுஸ் - டொலர், யப்பான் யன், நெதர்லாந்து கில்டர், கனேடிய டொலர், சுவிஸ் - பிராங்) நிலையான வைப்பு. சேமிப்பு வைப்புக் கணக்குகளின் ஊடாக இலங்கை வங்கி, மக்கள் வங்கி இலங்கை வர்த்தக வங்கி, கற்றன் நஷனல் வங்கி, செலான் வங்கி ஆகியவற்றில் இக்கணக்கினை ஆரம்பிக்கமுடியும்.

உள்ளூர் அந்நிய செலவாணிச் சந்தையின் தொழிற்பாட்டுப்போக்கு

★ 1992ஆம் ஆண்டில் ஒரு சதவீதத்தில் நிர்ணயிக்கப்பட்ட உடன் வாங்கும், விற்கும் வீதங்களுக்கிடையிலான இடைவெளி இவ்வாண்டு முழுவதும் மாற்றமடையாதே இருக்கின்றது.

உடன் வாங்கும் வீதம்

★1992ஆம் ஆண்டில் ஒரு ஐக்கிய அமெரிக்க டொலருக்கு 45.77 ஆக இருந்த உடன் வாங்கும் வீதம் 1993ஆம் ஆண்டில் ஒரு ஐக்கிய அமெரிக்க டொலருக்கு 49.31ஆக உயர்வடைந்தது.

உடன் விற்கும் வீதம்

1992ஆம் ஆண்டில் ஒரு ஐக்கிய அமெரி. டொலருக்கு 46.23 லிருந்து 1993ஆம் ஆண்டில் 49 81 ஆகஅதிகரித்தது.

★ உடன் கொள்வனவுகள்

மத்திய வங்கியின் உடன் கொள்வனவுகள்

1992ஆம் ஆண்டில் 4580 இலட்சம் டொலர்

1993ஆம் ஆண்டில்6430டொ...

...கொங் டொலர் ஆகிய அந்நிய நாணயங்களில் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட முடியும்.

அந்நிய நாணய வங்கி அலகின் தொழிற்பாடுகள்

(1) வதிவற்றோரிடம் இருந்து வைப்புகளை ஏற்றுக் கொள்ளல்.

(2) வதிவற்றோருக்கு குறுங் காலக் கடன்களை வழங்கல்.

(3) மத்திய வங்கியின் அனுமதியுடன் ஏனைய உள்ளூர் முயற்சிகளுக்கு வங்கி வசதிகளை வழங்கல்.

(4) ஏனைய வங்கிகளுடன் அந்நிய செலவாணிக்கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடல்.

(5) கடல் கடந்த நாடுகளில் மேற் கொள்ளப்படுகின்ற முதலீடுகளுக்கு நிதியளிப்பு செய்தல்.

(6] முதலீட்டு] ஊக்குவிப்பு வலயத்தில் உள்ள நிறுவனங்களுக்கு நிதியளிப்புச் செய்தல்.

அந்நிய நாணய வங்கி அலகின் குறிக்கோள்கள்

(1) பிறநாடுகளில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றிருக்கும் இலங்கையர்கள் இலங்கைக்கு கூடுதலான அந்நிய நாணயங்களை அனுப்புதலை ஊக்குவித்தல்.

(2) கரை கடந்த முயற்சிக்குத் தேவையான அந்நியச் செலவாணியை வழங்கல்

(3) முதலீட்டு ஊக்குவிப்பு வலய முயற்சிகட்கு கடன் வசதியளித்தல்

(4) வதியா தோரிடமிருந்து சேமிப்புக்களை அந்நிய நாணயத்தில் திரட்டி இத்தகைய முயற்சிக்கு கடன் வசதியளித்தல்

(5) சர்வதேச வங்கி வசதிகள் தேவைப்படுவோருக்கு அவற்றை வழங்குவதுடன் அந்நிய செலவாணி வங்கிப் பிரிவுகளையும் படிப்படியாக ஏற்படுத்தி இலங்கையைக் கரைகடந்த சர்வதேச பண மத்திய நிலையமாக மாற்றுதல்

கரைகடந்த வங்கிச் சேவையின்அனுகூலங்கள்

(1) பிறநாடுகளில் தொழில் பார்க்கும் இலங்கையர்கள் இலங்கைக்கு கூடுதலான அந்நிய நாணயங்களை அனுப்புவதற்கு இது ஓர் ஊக்குவிப்பாக அமைகிறது,

[2) அந்நிய நாணய நடவடிக்கைகளினாலும் வங்கிகளின் தொழிற்பாடு அதிகரிப்பதனாலும் பிறநாட்டு வங்கிகள் இலங்கையில் தமது கிளைகளை ஆரம்பிக்க முன் வருவார்கள்.

(3j கரைகடந்த வங்கிச் சேவையினால் வணிகவங்கிகளின் வருமானம் அதிகரிக்கின்றது. இதனால் இவ் அதிகரிக்கும் வருமானத்தைக்...

கொள்வனவுச் சந்தை 1988 ஆம் ஆண்டு ஜனவரி 18ஆம் திகதியிலிருந்து திறைசேரிஉண்டியல்களுக்கான இரண்டாம் தரச் சந்தையின் ஓர் துணைப் பிரிவாக மத்திய வங்கியினால்செற்பாட்டுக்குகொண்டு வரப்பட்டது. மறு கொள்வனவு சந்தை என்றால்? பணச் சந்தையில் ஆவணங்களை கொள்வனவு செய்துள்ளவர்களுக்கு அதன் முதிர்வு திகதிக்கு முன்னர் பணம் தேவைப்படின் அவ் ஆவணத்தைப்பணச்சந்தையில்செயற்படும் பிறிதொரு நிறுவனத்திற்கு விற்பனை செய்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம் ஆனால் இவ் ஆவணத்தை குறிப்பிட்டகால எல்லைக்குள் மறுபடியும் கொள்வனவு செய்வேன் என்றும் உத்தரவாதம் அளிக்கப்படுதல் வேண்டும் இதனாலேயே இது மறுகொள்வனவுச் சந்தை எனஅழைக்கப்படுகின்றது-

மறுகொள்வனவுச்சந்தையின் கால எல்லைகள்

ஒருநாள், மூன்று நாள், ஏழுநாள், முப்பதுநாள் ஆகிய கால எல்லைக்குள் மறு கொள்வனவு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுதல் வேண்டும்.

மறு கொள்வனவுச் சந்தையில் திறைசேரி உண்டியல்கள் அரசாங்க முறிகள், அரசாங்க உத்தரவாதமளிக்கப்பட்ட ச்ரக்கு முதல்கள் போன்ற ஆவணங்களைப் பயன்படுத்தி தேசிய சேமிப்புவங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் ணிக வங்கிகள், தொழிலாளர் சேமலாபநிதியம் தொழிலாளர் 'நம்பிக்கை நிதியம், முதலீட்டு அடமான வங்கி, காலத்துக்காலம் மத்திய வங்கியினால் அனுமதிக்கப்படும் ஏனைய நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மறு கொள்வனவுச் சந்தையின் குறிக்கோள்கள்

(1) அரச ஆவணங்களின் திரவத்தன்மையை அல்லது பணமாக மாற்றக் கூடிய தன்மையை அதிகரித்தல்.

(2) திரவத் தன்மையை அதிகரிப்பதன் மூலம் அரச ஆவணங்களுக்கு ஓர் போட்டிச் சந்தையை உருவாக்குதல்.

(3) பணச் சந்தை நடவடிக்கைகளில் பங்கு பற்றுபவர்களிடையே பணப்பாய்ச்சலை ஊக்குவித்தல்.

(4) பண நிரம்பலின் அடிப்படையிலும் குறுகியகால வட்டி வீதத்தை நிர்ணயிப்பதிலும் ஆவணங்களை கொள்வனவு விற்பனை செய்வதன் ஊடாக மத்திய வங்கி...

...இலட்சம், இதில்- வர்த்தக வங்கித் துறைக்கான சுழல்வு 354,820 இலட்சம். வங்கியல்லாத் துறைக்கான சுழல்வு 34,010 இலட்சம் மொத்தம் - 388,830

மத்தியவங்கி திறைசேரி உண்டியல்களின் மீள் கொள்வனவுச் சந்தையை 1993-ஒக்4-ம் திகதி அறிமுகப்படுத்தியது.

★ இம் 3 மாதத்தில் மீள் கொள்வனவு உடன் படிக்கையின் கீழ் ஒருநாள் முதலீடுகளுக்கு பொருந்தத்தக்க விளைவு வீதம் 16.50-19 3% வரை வேறுபட்டது.

## விசேட பூஜை

கொடிகாமம் மந்துவில் சேலம் இராஜ இராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் எதிர் வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

காலை 9 மணிக்கு விசேட பூசையினைத் தொடர்ந்து கவிஞர் த. நாகேஸ்வரன் அவர்களின் ''அன்னையைப் போல் ஒருதெய்வம் இல்லை'' என்னும் தலைப்பில் சொற்பொழிவும் இடம் பெறும். இதனைத்தொடர்ந்து விசேட நாதஸ்வர வித்துவான்களின் கச்சேரியும் இடம் பெறவுள்ளது. (86)

## 31 ஆம்நாள் நினைவஞ்சலி

### அந்தியேட்டிக் கிரியை அழைப்பு



தோற்றம்: 23-01-1945

மறைவு: 24-07-1994

அமரர்

**சபாரத்தினம் சிவஞானசுந்தரம்**

**(தெய்வேந்திரம்)**

24-07-1994 அன்று இயற்கை மரணமடைந்த எமது அன்புத்தந்தை சபாரத்தினம் சிவஞானசுந்தரம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (23-08-94) செவ்வாய்க்கிழமை அதிகாலை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்விலும் நண்பகல் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள்

''மாவடைப்பு''
பொலிகண்டி. (9167)

### விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பிரிவினர் நடாத்தும்

# லெப். கேணல் திலீபனின்

## 7-ம் ஆண்டு நினைவையொட்டி

### சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகள்

1994-09-26 லெப். கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தமிழீழ மாணவர்களிடையே சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டிகளை நடாத்த விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு மகளிர் பிரிவினர் தீர்மானித்துள்ளனர்.

**போட்டி விதிமுறைகள்:**

**கீழ்ப்பிரிவு**

01. கவிதைகள் பதினைந்து வரிகளுக்கு உட்பட்டதாகவும், கட்டுரைகள் ஐம்பது சொற்களுக்கு உட்பட்டதாகவும் இருக்க வேண்டும்.

02. படைப்புக்களின் உட்பொருள்,
அ. லெப். கேணல் திலீபனின் ஈகம்,
ஆ. இந்திய இராணுவத்தின் கொடுமைகளால் தமிழ் மக்கள் அடைந்த துன்பம் என்பவற்றுள் ஒன்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

**மத்திய பிரிவு**

01. கவிதைகள் இருபத்தைந்து வரிகளுக்கு உட்பட்டதாகவும், சிறுகதை கோட்டுத்தாளின் இரண்டு பக்கங்களுக்கு உட்பட்டதாகவும், கட்டுரை இருநூறு சொற்களுக்குள் அமைய வேண்டும்.

02. படைப்புக்களின் உட்பொருள்.
அ. லெப். கேணல் திலீபனின் ஈகம்
ஆ. இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலங்களில் தமிழ் மக்கள் புலி...

கொள்வனவு
1992-ம் ஆண்டு - 49 6 பில்லியன்
1993-ம் ,, 46.9 பில்லியன்

(3) உள்ளூர் அந்நிய செலாவணிச் சந்தை:

**Inter Foreign Exchange Market**

1977-ம் ஆண்டு பதவிக்கு வந்த அரசாங்கத்தின் தாராள பொருளாதாரக் கொள்கையின் விளைவாக அறிமுகப்படுத்தப்பட்டது. அத்துடன் இச்சந்தை அமைப்பு வளர்ச்சியடைந் தமைக்கான அடிப்படைக் காரணம் யாதெனில் 1970-ம் ஆண்டின் பின்னர் பெருமளவு இலங்கையர் மத்தியகிழக்கு நாடுகளில் வேலைவாய்ப்பில் ஈடுபட்டு பெருமளவு அந்நிய நாணயங்களையும், அத்துடன் ஏற்றுமதிகள் ஊடாகவும் கூடிய வருமானம் பெற்றனர் இவர்களை ஊக்குவிப்பதற்காக அப்போதைய அரசாங்கம் அந்நிய நாணய உரிமைச் சான்றிதழ் திட்டத்தினை அறிமுகப்படுத்தியதாகும். 1977-ம் ஆண்டு பதவிக்கு வந்த புதிய அரசாங்கம் இத்திட்டத்தினை நீக்கி வதிவற்றோர் அந்நிய நாணயக் கணக்குத் திட்டத்தைத் செயற்பாட்டுக்கு கொண்டுவந்தது. பின்னர் சகல வணிக வங்கிகளும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிற்கு அந்நிய நாணய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஏற்றவாறு அந்நிய நாணய வங்கி அலகு (Foreign Currency Banking Unit) 1979ஆம் ஆண்டில் மத்திய வங்கியின் அனுமதியுடன் செயற்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டது இவ்வாறே உள்ளூர் அந்நிய செலாவணிச் சந்தை இலங்கையில் செயற்பட ஆரம்பித்தது.

இச்சந்தை அமைப்பானது தற்போது வதிவற்றோர் அந்நிய நாணயக் கணக்கின் ஊடாகவும், வதிவுள்ளோர் அந்நிய நாணயக் கணக்கின் ஊடாகவும் செயற்பட்டு வருகின்றது.

வதிவற்றோர் அந்நிய நாணயக் கணக்கு

**Non-resident Foreign CurrencyAccount[NRFC**

★ உடன் கொள்வனவுகள்

மத்திய வங்கியின் உடன் கொள்வனவுகள்
1992ஆம் ஆண்டில் 4580 இலட்சம் டொலர்
1993ஆம் ஆண்டில்6430டொலர் இலட்சமாக அதிகரித்தது (40% அதிகரிப்பு)

உடன் விற்பனைகள்
1992ஆம் ஆண்டில் 840 இலட்சம் டொலர்
1993ஆம் ஆண்டில் 200 இலட்சம் டொலர் [76% வீத வீழ்ச்சியாகும்]

## கரை கடந்த வங்கிச் சந்தை (Off Shore Market)

கடல் கடந்த நாடுகளில் வெளிநாட்டுச் செலவாணியினை அடிப்படையாகக் கொண்டு குறுங்காலக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்ற நிறுவனங்களை உள்ளடக்கிய சந்தையே கரை கடந்த வங்கிச் சந்தையாகும். இதன்படி ஒரு நாட்டின் சட்டப்படி நடைமுறையில் இருக்கும் நாணயத்தில் பிறிதொரு நாட்டு வணிக வங்கிகள் வைப்புக்களை ஏற்றுக் கடன்களை வழங்கும் தொழிற்பாட்டில் ஈடுபடுவதாகும்.

உலகின் பல நாடுகளிலும் பல்வேறு பெயர்களுடன் கரைகடந்த வங்கிச் சந்தை செயற்படுகின்றது.

பிலிப்பைன்ஸ் - கரைகடந்த வங்கி அலகு
சிங்கப்பூர் - ஆசிய நாணய அலகு, பராயன் வெளிநாட்டு வங்கி அலகு
அராபிய நாடுகள்-வரையறுக்கப்பட்ட அனுமதி பெற்ற வங்கிகள்
இலங்கையில்-அந்நிய நாணய வங்கி அலகு

அந்நிய நாணய வங்கி அலகு என்றால்? கடல் கடந்த நாடுகளில் வெளிநாட்டு நாணயங்களில் குறுங்காலக் கடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்காக வணிக வங்கிகளினால் ஏற்படுத்தப்பள்ள உப அமைப்புகளாகும் இவ் வங்கி அலகானது ஐக்கிய அமெரிக்க டொலர், ஸ்ரேலிங்பவுண் யப்பான்யென், ஜேர்மன்மார்க்,பிரான்ஸ்பிராங் நெதலாண்ட் கில்டர், சுவிடிஸ் குறோனர், சுவிஸ்பிராங் சிங்கப்பூர் டொலர், கொங்

கிகள் இலங்கையில் தமது கிளைகளை ஆரம்பிக்க முன் வருவார்கள்.

(3j) கரைகடந்த வங்கிச் சேவையினால் வணிகவங்கிகளின் வருமானம் அதிகரிக்கின்றது. இதனால் இவ் அதிகரிக்கும் வருமானத்தைக் கொண்டு உள்ளூர் கிளையமைப்பை வங்கிகள் அபிவிருத்தி செய்வதன் மூலம்வங்கிப் பழக்க வழக்கங்களை பரவலாக்கியது.

[4[ உல்லாசப் பிரயாணத் துறை புதிய முதலீடுகள் ஆகியவற்றின் ஊடாக நாட்டின் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும்.

[5] கரைகடந்த வங்கிசேவையின் ஊடாக உள்ளூர் அந்நிய செலவாணிச் சந்தை வளர்ச்சி அடைவதனால் இலங்கையின் நிதிச் சந்தை நவீனமயமாக்கப்படும்,

(6) அந்நிய நாணய வங்கி அலகின் ஊடாக அந்நிய உல்லாசப் பிரயாணிகளுக்குநிதிச் சேவைஅளிக்கப் படுவதனால் உல்லாசப் பயணிகளின் வருகையை அதிகரித்து உல்லாசப் பிரயாணத்துறை வளர்ச்யடையும்

கரைகடந்த வங்கிச் சந்தையின் தொழிற்பாட்டுப் போக்கு

★ நாட்டிலுள்ள 23 வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் மொத்தச் சொத்துக்கள்/ பொறுப்புக்கள் 3 % வீழ்ச்சியடைந்துள்ளது (380 இல. டொ.)

★ முற்பணங்கள்;- வதிவுடையோருக்கான முற்பணங்கள் இவ்வாண்டில் (1993) 6 % அதிகரிப்பு (370 இலட்சம்)

வதிவற்றோருக்கான முற்பணங்கள் 15% சதவீத விழ்ச்சி]840 இலட்சம் டொலர்]

★ வெளிநாட்டு நாணய வங்கிப் பிரிவிலிருந்து ஏற்றுமதியாளருக்கு வழங்கப்பட்டு வந்தகடன்கள் வர்த்தக வங்கியின் உள்நாட்டுப் பிரிவுகளுக்கு அத்தகைய கடன்கள் மாற்றம் செய்யப்பட்டமையுடன் 1993 ஜனவரியில் நிறுத்தப்பட்டது.

மறு கொள்வனவுச்சந்தை

**Re Purchase Market**

ஏற்கனவே இலங்கையில் செயற்படும் நான்கு பணச் சந்தை அமைப்புகளுடன் மறு

ஊக்குவித்தல்.

(4) பண நிரம்பலின் அடிப்படையிலும் குறுகிய கால வட்டி வீதத்தை நிர்ணயிப்பதிலும் ஆவணங்களை கொள்வனவு விற்பனை செய்வதன் ஊடாக மத்திய வங்கிக்கு கூடுதலான கட்டுப்பாட்டு அதிகாரங்கள் வழங்கல்

மறுகொள்வனவுச் சந்தையின் அனுகூலங்கள்

(1) அரச ஆவணங்களை உடனுக்குடன் விற்பனைசெய்யக்கூடியதாக இருப்பதனால் அவற்றின் திரவத்தன்மை அதிகரிக்கும்.

(2) ஆவணங்களைக் கொள்வனவு செய்வோர் அவற்றின் முதிர்ச்சிக் காலம்வரை அவற்றிற்கான பணத்தைப் பெறுவதற்குக் காத்திருக்க வேண்டியதில்லை.

(3) அரச ஆவணங்களின் திரவத்தன்மை அதிகரிப்பதனால் கூடுதலானவர்கள் இவற்றைக் கொள்வனவு செய்வதற்குமுன் வருவார்கள். இதனால் ஆவணங்களுக்கான விற்பனை வாய்ப்பு அதிகரிக்கும்

(4) போட்டி அடிப்படையில் ஆவணங்கள் கொள்வனவு செய்யப்படுவதனால் அவற்றிற்கான வட்டிவீதம் அதிகரிக்கும் இதனால் இவற்றைக் கொள்வனவு செய்வோர் கூடிய வட்டிவீதத்தை அனுபவிக்கலாம். இதனாலும் ஆவணங்களின் விற்பனை அதிகரிக்கும்.

5) ஆவணங்களைக் கொள்வனவு விற்பனை செய்யும் அடிப்படையில் மத்திய வங்கிக்குக் கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்படுவதனால் பணநிரம்பலின் அடிப்படையிலும் குறுகிய கால வட்டி வீதத்தை நிர்ணயிப்பதன் அடிப்படையிலும் மத்தியவங்கிபொருளாதாரத்தின் மீது கூடுதலான கட்டுப்பாட்டை அதிகரிக்கலாம்.

மறு கொள்வனவுச் சந்தையின் தொழிற்பாட்டுப் போக்கு. (1993)

★ மீள் கொள்வனவு ஒப்பந்தத்தின் கீழான மொத்த விற்பனை சுழல்வு - 388,830

01. கவிதைகள் இருபத்தைந்து வரிகளுக்கு உட்பட்டதாகவும், சிறுகதை கோட்டுத்தாளின் இரண்டு பக்கங்களுக்கு உட்பட்டதாகவும், கட்டுரை இருநூறு சொற்களுக்குள் அமைய வேண்டும்.
02. படைப்புக்களின் உட்பொருள்.
   அ. லெப். கேணல் திலீபனின் ஈகம்
   ஆ இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலங்களில் தமிழ் மக்கள் புலி வீரர்களைக் காத்த விதம்.
   இ. லெப். கேணல் திலீபனின் வீரச்சாவின்போது மக்களிடையே ஏற்பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்பும், இந்திய எதிர்ப்பு உணர்வும் என்ற விடயங்களுள் ஒன்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

### மேற் பிரிவு

01. கவிதைகள் நூறு சொற்கள் வரையிலும், சிறுகதைகள் கோட்டுத்தாளின் ஐந்து பக்கங்களுக்கு உட்பட்டதாகவும், கட்டுரைகள் கோட்டுத் தாளின் ஐந்து பக்கங்களுக்கு உட்பட்ட நாகவும் அமைய வேண்டும்.
02. படைப்புக்களின் உட்பொருள்,
   அ. லெப். கேணல் திலீபனின் ஈகம்
   ஆ. இந்தியா எம் மண்ணுக்குச் செய்த துரோகம்
   இ. எமக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நீண்ட காலத் தொடர்புகள் இன்றைய நிலைமை,
   ஈ இந்திய இராணுவம் எம் மண்ணுக்கு வந்ததற்கான பின்னணி.
   உ. உலகின் நான்காவது பெரிய இராணுவத்தை எம் மண்ணில் இருந்து அகற்றுவதற்காக தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட தீர்க்கமான நடவடிக்கைகளும், புலிகளின் நுண்ணிய போர்த்திறனும்.
   ஊ. இந்திய இராணுவம் புலிகளிடம் எவ்வாறு தோற்றது என்ற விடயங்களுள் ஒன்றை உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

### கீழ், மேல், மத்திய பிரிவுகளுக்கான பொதுவான விதிமுறைகள்:-

01. படைப்புக்களைத் தாளின் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும்.
02. ஒருவர் எத்தனை படைப்புக்களையும் அனுப்பலாம்.
03. போட்டியாளர் தனது
   (அ) பெயர்
   (ஆ) பாடசாலையின் பெயர்
   (இ) கல்வி கற்கும் ஆண்டு
   (ஈ) வகுப்பாசிரியர் அல்லது அதிபரின் உறுதிப்படுத்தப்பட்ட ஒப்பம்.

   என்பவற்றைத் தனியே ஒரு தாளில் எழுதி, படைப்புக்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.

   (உ) கடித உறையின் இடது பக்கத்தில் தியாகி திலீபனின்7-ம்ஆண்டுநினைவுப் போட்டி என குறிப்பிடல் வேண்டும்.

04. படைப்புக்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்புச் செயலகங்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
05. போட்டி முடிவுத் திகதி 10-09-94 முடிவுத் திகதிக்கு பிந்திவரும் ஆக்கங்கள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது.
06. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.
07. மாவட்ட ரீதியாக சிறுகதை, கவிதை, கட்டுரைப் போட்டியில் 1-ம்2-ம்3-ம் இடத்தில் தெரிவாகும் மாணவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

வளர்ந்து வரும் இளைய தலைமுறையினரின் படைப்பாற்றலை வெளிக் கொண்டு வரும் முகமாக நடாத்தப்படும் இப் போட்டிகளில் கலந்து கொள்ளுமாறும் அனைத்து தமிழீழ மாணவர்களையும் கேட்டுக் கொள்கின்றோம்.

**விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு,**
**மகளிர் பிரிவு.**

(சி-10157)

நல்லூர் பிரதேச நூலகம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு..

பலவேளைகளில் நேர்மையுடையதாய் இல்லாதது நேர்மை உடையதாய் தோற்றமளிக்கும்.
- தியாக்ரிட்டஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 22-08-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

# தோல்வி ஏற்படுத்திய குத்து வெட்டு

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில், ஐக்கிய தேசியக்கட்சியின் தோல்வியானது, மேலோட்டமான பார்வைக்கு சிறிய இடைவெளி உள்ளதாகத் தென்படினும், இத்தோல்வியானது ஐ.தே. கட்சியை ஆட்டம் காண வைக்கும் அளவிற்கு பெரும் தோல்வி என்பதே உண்மையாகும்.

விகிதாசார பிரதிநிதித்துவம் ஐ.தே. கட்சிக்கென்றே அமுலாக்கப்பட்ட தேர்தல் முறையாகும். கடந்த காலத்தில் நடைபெற்ற தேர்தல் முடிவுகளின் அடிப்படையை தெளிவாக ஆராய்ந்து இம்முறை அமுல்படுத்தப்பட்டது. இம்முறையில் ஐ.தே.கட்சி தோல்வி என்பதையே காணமுடியாது என்ற நிலையே இதை அமுல்படுத்தும்போது எதிர்பார்க்கப்பட்டது.

இவ் எதிர்பார்க்கையிலும் பெரும்பாலும் தவறும் இருந்ததாகக் கொள்ள முடியாது. 1978ஆம் ஆண்டு இத்தேர்தல் முறை அமுலாக்கப்பட்ட பின்னர் பல தடவை ஐ.தே.க இதில் நன்மையும் அடைந்துள்ளது. இம்முறை கூட இத்தேர்தல் முறையே ஐ.தே. கவைப் பெருமளவில் காப்பாற்றி, எதிர்க்கட்சி ஆயினும் பெரியதொரு எண்ணிக்கையான ஆசனங்களை அக்கட்சிக்குக் கொடுத்துள்ளது.

இவ் விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை இல்லாது, தொகுதிவாரிப் பிரதிநிதித்துவ முறை தொடர்ந்தும் இருந்திருக்குமாயின் இம்முறை தேர்தலின் போது ஐ.தே. கட்சி 1970 ஆம் ஆண்டில் சந்தித்த தோல்வியை ஒத்ததொரு தோல்வியையே சந்தித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இதைத்தவிர ஐக்கிய தேசியக் கட்சியானது இம்முறை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தயவிலேயே தப்பிப்பிழைத்துள்ள தெனலாம். அதாவது இ.தொ.கா. ஆதரவளித்த / மலையக தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறக்கூடியதாக இருந்த மாவட்டங்களிலேயே பொதுஜன ஐக்கிய முன்னணியைத் தோற்கடிக்க முடிந்

# ஐ. தே. க. அரசால் நாட்டில் பல புதிய பிரச்சினைகள் உருவாகின

- காமினி திசாநாயக்க

(கொழும்பு)

பதினேழு ஆண்டுகால ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் பல பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டதைப் போன்று பல புதிய பிரச்சினைகள் உருவாகியும் உள்ளன. இதன் காரணமாகவே இம் முறை தேர்தலில் ஐ.தே.க. தோல்வி அடைய வேண்டி ஏற்பட்டது என முன்னாள் அமைச்சர் காமினி திசாநாயக்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பி.பி.ஸிக்கு அவர் அளித்த பேட்டியில் இக்கருத்தைதெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் தற்போது மக்கள் புதியதொரு யுகத்தை எதிர்பார்த்து இருக்கின்றமையை இம் முடிவுகள் தமக்கு எடுத்துக் காட்டியதாக தெரிவித்துள்ளார்.

எனவே இக் காரணங்களே ஐ.தே.கவின் தோல்விக்கு காரணம் என நாம் கருத முடியும். இதைத் தவிர ஐ.தே.க. அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் அலை திரும்பியதாக கருத முடியாது என மேலும் அவர் தெரிவித்தார்.

# திருட்டுச் சம்பவத்தில் எம்.பியின் மனைவி ஈடுபாடு

ஹெலஉறுமய பிரமுகரும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து, ஐக்கிய தேசியகட்சிக்கு மாறியவருமான திலக்கருணாரத்னாவின் மனைவி திருட்டுச் சம்பவமொன்றின் போது கையும் மெய்யுமாகப் பிடிபட்டுள்ளார். எலிபண்ட் ஹவுஸ் வியாபார நிறுவனத்தில் இச் சம்பவம் நடைபெற்றதாக தெரியவருகிறது.

மேற்படி வியாபார நிறுவனத்தில் சில பொருட்களை கொள்வனவு செய்த இவர், இவற்றை நிறுவன பரிசோதகரிடம் கொடுத்துவிட்டு, வேறொரு பையில் திருடிய பொருட்களை போட்டுக் கொண்டு வெளியேற முயன்ற போதே இவர் பாதுகாப்பு அதிகாரியிடம் சிக்கினார்.

இவர், தம்மை இன்னார் என இனங்காட்டியதுடன், தன்னைப் பொலிசாரிடம் ஒப்படைக்க வேண்டாமெனவும் கேட்டுள்ளார். அதற்கமைய அவர் திருடிய பொருட்களுக்கான பெறுமதியின் மும்மடங்கு அபராதம் விதிக்கப்பட்டதுடன் விடுவிக்கப்பட்டார் என கொழும்பு வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க பதவி விலக வேண்டும்

வாசுதேவ நாணயக்கார

இந்த நாட்டில் ஜனநாயகத்திற்கு மதிப்பளித்து, பாராளுமன்றதிற்கு முழுமையான பலத்தை வழங்க வேண்டுமானால் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா, ஜனாதிபதி பதவியிலிருந்து விலகிக் கொள்வதே சிறந்த பாரம்பரியமாகும் என இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான வாசுதேவ நாணயக்கார கூறியுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு இத்தேர்தலில் கிடைத்த வெற்றியானது மூர்க்கத்தனமான ஒரு அரசாங்கத்திற்கு எதிரான மக்களின் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகவே கொள்ள வேண்டும்.

மக்கள் மீது அழுத்தங்களையும் வன்முறைகளையும் தான் நினைத்த நினைத்த இடங்களில் ஏவி விட்டு மக்கள் மீது நடத்திய பல மூர்க்கத்தனமான நடவடிக்கைகளுக்கு எதிராக, மக்கள் நடத்திய போராட்டத்தின் வெற்றி இது என தான் கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்தும் ஆட்சியில் அமைச்சுக்களையும் சர்வ அதிகாரத்தையும் ஜனாதிபதி தம்வசம் கொண்டுள்ளார். அவர் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஒத்துழைப்பை நல்குவார் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் வாசுதேவ நாணயக்கார சுட்டிக் காட்டினார்.

எதிர்காலத்தில் நடைபெறும் ஜனாதிபதி தேர்தலில் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதன் மூலம் மட்டுமே இதைவிட, உச்சக்கட்ட வெற்றியை பொதுஜன ஐக்கிய முன்னணி பெற்றுக் கொள்ளும் என மேலும் அவர் தெரிவித்தார்.

## கொடுப்பனவு இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா மருத்துவமனையில் தாதியராக தற்போது பணிபுரியும் ஊழியர்கள் மாணவ தாதியராக பணிபுரிந்த போது கொடுக்கப்பட வேண்டிய ஒருமாத ஊதியம் இதுவரை கிடைக்காததால் விசனமடைந்துள்ளனர்.

இவர்கள் மாணவதாதிகளாக கடமையாற்றி தற்போது இரண்டு வருடங்கள் பூர்த்தியாகி விட்டபோதிலும் அக்கொடுப்பனவு வழங்கப்படாமை குறிப்பிடத்தக்கதாகும். (சி)

## பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பரீட்சை

தேசிய கல்வி நிறுவனத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பரீட்சை யா/கனகரத்தினம் ம.ம. வியிலும், யா/யாழ்ப்பாணம் ஸ்ரேசன் எம்.எம்.ரி.எம். எஸ் இலும் நடைபெறுமென அனுமதி அட்டைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பரீட்சை நிலையங்கள் முறையே யா/யாழ். இந்துக் கல்லூரியிலும், யா/யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் அமைக்கப்பட்டுள்ளன என்றும் பரீட்சார்த்திகளை இந் நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றுமாறும் யாழ். வலயம் 1, கல்விப் பணிப்பாளர் செல்வி தி பெரியதம்பி அறிவித்துள்ளார்.

## சைக்கிள்கள் வழங்கப்பட்டன

(வடமராட்சி)

இன்பருட்டி கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்கள் 42 பேருக்கு இச் சங்கம் தவணை அடிப்படையில் புதிய துவிச்சக்கரவண்டிகளை வழங்கியுள்ளது (யோ)

# கொழும்பு செல்லவிருக்கும் நோயாளர் கவனத்திற்கு

எதிர்வரும் 25 ஆம் திகதி வியாழக்கிழமை கீழ்வரும் நோயாளர்களையும் அவருடன் கூடச் செல்பவர்களையும் இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு, மற்றும் தண்ணீருடன் யாழ்போதனா வைத்தியசாலைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார்.

அன்றையதினம் பிரயாணம் செய்யும் நோயாளர்கள் மற்றும் உதவியாளர்கள் விபரம் வருமாறு:

வல்லிபுரம் கணபதிப்பிள்ளை, திருமதி மகேஸ்வரி காசிநாதன், கணபதிப்பிள்ளை முத்துலிங்கம், செல்லர் சிங்கரத்தினம், திருமதி இராஜேஸ்வரி குணபாலசிங்கம், பொன்னையா மகாதேவன், தணிகாசலம் செல்லத்துரைசாமி, செல்வி தாரணி மாணிக்கராஜா, திருமதி லோகநாயகி மாணிக்கராஜா, முருகேசு சண்முகம், திருமதி லீலாவதி குணபாலசிங்கம், வைத்திலிங்கம் சுப்பிரமணியம், திருமதி குலராஜா மகேஸ்வரி, செல்வி அருள்ராணி குலராஜா, குகநாசன் கந்தையா, கந்தையா பொன்னம்மா, வேலுப்பிள்ளை; திருமதி கந்தையா பொன்னம்மா.

இவர்கள் சமுகம் அளிக்க வேண்டிய நேரம் பின்னர் தெரிவிக்கப்படும். (21)

# அம்பாறை நகரிலிருந்த தமிழர் வெளியேற்றம்

(அம்பாறை)

அம்பாறை நகரப் பகுதியில் கடந்த காலங்களில் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக வசித்து வந்த 120 தமிழ்க் குடும்பங்களை மீளக் குடியமர்த்தல் என்ற போர்வையின் கீழ் வளத்தாப்பிட்டி பகுதியில் குடியேற்றுவதற்கு அதிகாரிகள் முயற்சி மேற்கொண்டு இருக்கின்றனர்.

காரைதீவுப்பகுதியில் கனகரத்தினம் அரங்கைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள குடிசைகளில் தற்போது வாழ்ந்து வரும் இவர்களுக்கு வளத்தாப்பிட்டி பகுதியில் வசதி செய்து தரப்படும் என்று அதிகாரிகள் கூறிய போதும் இடம்பெயர்ந்தோர் குடியேறுவதற்கு மறுப்பு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்திலுள்ள வீரமுனைக் கிராமத்தில் மீள் குடியேற்றம் நடைபெற்ற போதிலும் அங்குள்ளவர்களால் தொழிலை மீண்டும் ஆரம்பிக்க முடியவில்லை என்பதும், கணவனை இழந்த பெண்களுக்கு கூட உரிய உதவிகள் கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது

## ஓய்வூதியம்

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுபவர்களது ஆகஸ்ட் மாத ஓய்வூதியம் இன்று காலை வழங்கப்படுமென வங்கி முகாமையாளர் திரு கணேசமூர்த்தி தெரிவித்தார். (யே)

# கறுப்பு ஜூலை தினம் லண்டனில் அனுஷ்டிப்பு

(லண்டன்)

83, ஜூலை கலவரத்தை நினைவு கூரும் கறுப்பு ஜூலை தினம், இம்முறையும் லண்டனில் நடைபெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசக் கிளையினரால் ஒழுங்கு செய்யப்பட்ட, இவ் விழாவில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர்.

தமிழீழத் தேசியத் தலைவரின் படங்களை இவர்கள் தாங்கிச் சென்றனர். ஊர்வலத்தின் இறுதியில் கூட்டம் நடைபெற்றது. இதில், குர்திஷ் இன மக்களின் விடுதலைக்காக போராடும் பிகேகேயின் பெண் உறுப்பினர் ஒருவர் உரையாற்றினார். தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் அணி தமக்கு எடுத்துக்காட்டாக இருந்ததாக அவர் கூறினார்.

இந்தோனேஷியாவின் கிழக்குத் திமோரின் விடுத

## இசைப்பேருரை

(கொழும்புத்துறை)

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் பிரதம சிஷ்யன் பிரசங்க பூஷணம் சுழிபுரம் திரு நடேசன் சிவசண்முகமூர்த்தி அவர்கள் ஆற்றும் இசைப் பேருரைப் பூர்த்திஇன்று இரவு 8.00 மணிக்கு நவாலி ஸ்ரீ முருகன் ஆலயத்தில் இடம்பெறும்.

இசைப் பேருரைப் பூர்த்தி விழாவான இன்று ''வள்ளி திருமணம்'' என்னும்

# பத்திரிகைகளிடம் 50 லட்சம் ரூபா

தப்பிப்பிழைத்துள்ள தெனலாம். அதாவது இ.தொ.கா. ஆதரவளித்த / மலையக தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறக்கூடியதாக இருந்த மாவட்டங்களிலேயே பொதுஜன ஐக்கிய முன்னணியைத் தோற்கடிக்க முடிந்தது. இந்தவகையில் மலையகத்தில் ஐ. தே. க. பெற்ற வெற்றி என்பதை விட இதனை தொண்டமானின் உபயம் என்றே கூறமுடியும்;

இந்நிலையில், வெளிப்பார்வைக்கு ஐ தே. கட்சியின் தோல்வி சிறிது போன்று தென்படினும் அக்கட்சிக்கு விழுந்த ஒரு பலமான அடி என்றே கூறமுடியும். இதனை ஐ தே. க. வட்டாரத்தினரும் ஓரளவு உணர்ந்துள்ளது போல் தெரிகின்றது. அதுவே ஐ. தே. கவிற்குள் இன்று எழுந்துள்ள குழப்பத்திற்கும் தடுமாற்றத்திற்கும் காரணம் எனவும் ஊகிக்கமுடிகின்றது;

அக்குழப்பத்தின் வெளிப்பாடே ஐக்கிய தேசிய கட்சிக்குள் இன்று கிளர்ந்துள்ள எதிர்க்கட்சியின் தலைவர் பதவிக்குரிய போட்டியாகும். இப்போட்டியில் ரணில் அணியினரும், காமினி திசநாயக்கா அணியினரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இந்த வகையில் இருதரப்பினரும் வெளிப்படையாக மோதிக் கொண்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை;

ஆனால், இவ்வாறு மோதிக்கொள்ளும் இரு தரப்பினர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு தலைமை இருக்கின்றது என்று எண்ணுவதாகத் தெரியவில்லை. தலைமையும் அது குறித்து கவலைப்படுவதாகவோ அன்றி அக்கறைப்படுவதாகவோ தெரியவில்லை போன்றே உள்ளது;

ஏனெனில், தலைமையே இத்தேர்தல் தோல்வியின் பின் தனது பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்குப் போராட வேண்டியுள்ளது. அடுத்து அரசியல் விமர்சகர்களின் கருத்துப்படி, ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வெற்றி உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், தொடர்ந்து தலைமைகளைத் தக்க வைக்கமுடியுமா? அவ்வாறு தக்க வைப்பினும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டாலும் தேர்தல் வெற்றிகிட்டுமா? என்பதில் தலைமைக்குக் குழப்பமே எஞ்சியுள்ளது;

இந்தவகையில் எதிர்க்கட்சி தலைமைப் பதவிக்கு ரணிலும் - காமினியும் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கையில், ஐ தே கவின் இன்றைய தலைமையோ அரசியற் துறவறம் பற்றி கற்பனை செய்து கொண்டு காலம் கழிக்கிறது, இந்நிலையில் இருந்து ஐ தே க விடுபட சிலகாலம் செல்ல வேண்டியது தவிர்க்க முடியாதது போன்றே உள்ளது.

மக்கள் மீது நடத்திய பல

அவர் தெரிவித்தார்.

களை வழங்கியுள்ளது (யோ)

# பத்திரிகைகளிடம் 50 லட்சம் ரூபா மான நட்டம் கோருகிறார் அதிகாரி

சண்டே டைம்ஸ் மற்றும் ஐலண்ட் பத்திரிகைகளிடம் இருந்து ஐம்பது லட்சம் ரூபா நட்ட ஈடாக தரவேண்டுமெனக் கோரி முன்னாள் தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சர் ஏ. எம். எஸ். அதிகாரி கடிதமொன்றை எழுதியுள்ளார்.

கடந்த முதலாம் திகதியன்று இப் பத்திரிகைகளில் அதிகாரியின் மீது பிடிவிறாந்து என்ற வகையில் பிரசுரிக்கப்பட்ட செய்திகளின் மூலம் தமக்கு மான நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும், அதற்காக நட்ட ஈடு தரப்பட வேண்டும் என்றும் தமது சட்டத்தரணி மூலமாக எழுதியுள்ள கடிதத்தில் ஏஎம். எஸ் அதிகாரி குறிப்பிட்டுள்ளார்

முன்னாள் அமைச்சர் அதிகாரியின் சட்டத்தரணியான தயா பெரேரா தமது கடிதத்தில் மேலும் விபரிக்கையில். கடந்த ஜூலை 29-ம் திகதியளவில் அநுராதபுரம் மாவட்டம் எப்பாவல பகுதியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றைத் தொடர்ந்து அப்பகுதியில் பதற்றம் நிலவியது. அப்போது அப்பகுதிக்கு ஐ தே.க வேட்பாளரான அதிகாரி சென்றார். அங்கு நின்றிருந்த சுதந்திரக் கட்சியின் அப்பிரதேச அமைப்பாளரான பியசேன அமைச்சரின் வாகனத்தைத் தாக்கியதுடன் அவரை அவதூறு செய்தார் இவர் வேறு ஒரு சம்பவம் காரணமாக பொலிசாரால் கைது செய்யப்பட்டிருந்து அன்று காலையில் தான்விடுவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிலைமையில் அவரைத் தாக்கிய அதிகாரி அவ் இடத்திலிருந்து பிறிதொரு கூட்டத்திற்காக அகன்று சென்றிருந்தார் இதன் பின்பு பியதாசவின் குடிசை தீக்கிரையாக்கப்பட்டிருந்தது இதற்கும் முன்னாள் அமைச்சர் அதிகாரிக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது இதன்பின்பு ஐ. தே. க ஆதரவாளரான பத்திரான என்பவரின் மதுபானச் சாலைக்கு சென்ற பியதாச தான் எப்பாவல பொலிஸ் நிலையம் செல்வதற்காக 250 ரூபா தரும்படி கேட்டுள்ளார். இதைத் தொடர்ந்து ஏற்பட்டமோதலில்காயமுற்ற பியசேன தலாவ வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். இதன் பின்னர் அங்கு அவர் மரணமானார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கதிரியக்ககழிவுப் பொருட்கள் கடத்திச்செல்ல பாக். முயற்சி

## -ஜேர்மன் அதிகாரிகள் கண்டுபிடிப்பு

(பொன்)

பாகிஸ்தானுக்கு இரகசியமாக கடத்திச் செல்வதற்கு முயற்சிக்கப்பட்ட கதிரியக்க கழிவுப் பொருட்களில் ஹைட்ரஜன் குண்டுகளைத் தயாரிக்கக்கூடிய லத்தியம்-6 என்ற கனிமப் பொருளும் இருக்கக் காணப்பட்டதாக ஜேர்மன் அரசு கூறியுள்ளது.

முன்னாள் சோவியத் நாடு ஒன்றிலிருந்து கதிரியக்க அணுப் பொருள்களை பாகிஸ்தான் கடத்த முயன்றது தொடர்பான ஆவணங்கள் சிலவும் ஜேர்மன் அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பெர்லின் நகரில் நடத்தப்பட்ட சோதனையின் போது இதற்கான தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன; ஒரு பாகிஸ்தானியர் உட்பட நான்கு பேர் இது தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர். இது தொடர்பான விசாரணைகளில் பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக மாஸ்கோ தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ரஷ்யாவிலிருந்து கதிரியக்க தொழிற்பாடுடைய கழிவுப் பொருட்கள் எதுவும் காணாமற் போகவில்லை எனவும், உக்ரையினில் இருந்து தான் கடந்த ஆண்டில் இத்தகைய பொருட்கள் காணாமற் போயிருந்தது எனவும் ரஷ்யா மேலும் கூறியுள்ளது.

யத்தில் இடம்பெறும்.

இசைப் பேருரைப் பூர்த்தி விழாவான இன்று ''வள்ளி திருமணம்'' என்னும் பொருள் பற்றிய இசைப் பேருரை நடைபெறும். (24)

க்கு எடுத்துக்காட்டாக இருந்ததாக அவர் கூறினார்.

இந்தோனேஷியாவின் கிழக்குத் திமோரின் விடுதலைப் போராளி ஒருவரும் இக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினார்.

# வன்னி மாவட்டத்தில் வாந்திபேதி பரவுகிறது

வன்னி மாவட்டத்தில் வாந்திபேதி நோயின் தாக்கம் அதிகமாகி இருப்பதாக மருத்துவ வட்டாரங்களிலிருந்து தெரிய வந்துள்ளது.

கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதைத் தொடர்ந்து அநேகமான கிணறுகளில் புற வெள்ளம் கலந்ததே இந் நோயின் தாக்கம் இன்னும் நீடிப்பதற்கு காரணமாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

வ ந்திபோதி நோயைக்கட்டுப்படுத்தும் முயற்சியில் மருத்துவ வட்டாரங்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

# விசர்நோய் தடுப்பூசி

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி மருந்து ஏற்றுவதற்கான நடவடிக்கைகளை சுழிபுரம் சுகாதாரப் பிரிவினர் மேற்கொள்ளவுள்ளனர்.

எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை காலை முதல் மாலை வரை மேற்படி பகுதிகளிலுள்ள ஐந்து பிரதான இடங்களில் வைத்து வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்படும். இதன் பிரகாரம் பொன்னாலை சனசமூக நிலையம், மூளாய் பிள்ளையார் கோவிலடி, மூளாய் தெற்கு காளிகோவிலடி. தொல்புரம் மத்திய சனசமூக நிலையம், தொல்புரம் மேற்கு கலைவாணி சனசமூக நிலையம் ஆகியனவற்றில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றப்படும். இந்த அத்தியாவசிய சேவையை கருத்திற்கொண்டு மக்களை ஒத்துழைக்குமாறு சுகாதாரப் பகுதியினரும், வலி மேற்கு பிரதேச சபையினரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (41)

# புலிகளின் குரல்

## நிகழ்ச்சி நிரல்

### 1994. 08. 22

### திங்கள் இரவு

08. 01 - தளிர்கள் - சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08. 20 - செய்திச்சரம்
08. 30 - செய்திகள்
08. 40 - தரிசனம்

### 1994. 08. 23

### செவ்வாய் காலை

07. 02 - மாவீர வணக்கம்
07. 15 - இன்றைய தாரகை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - தாயகப் பாடல்கள்.

# யாழ்., வன்னி தேர்தலை ரத்துசெய்ய தேர்தல் ஆணையாளர் விரும்பினார்

(கொழும்பு)

யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களில் நடைபெற்ற தேர்தலின் முடிவுகளை ரத்து செய்ய தேர்தல் ஆணையாளர் முயன்றபோதிலும் இம் மாவட்டங்களில் உடனடியாக மீண்டும் தேர்தல் நடத்த முடியாது என சுட்டிக்காட்டப்பட்டதையடுத்தே நடைபெற்ற தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொள்ள ஆணையாளர் இணங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து தெரியவருவதாவது வன்னி, யாழ். மாவட்ட வாக்களிப்பு தொகையை அவதானித்த தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா புதன் மாலை மாநாடு ஒன்றை கூட்டினார். இதில் சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலர் தர்மசிறி சேனநாயக்கா, ஐ. தே. க பொதுச் செயலர் காமினி விஜயசேகர, கே. என். சொக்ஸி உட்பட பல கட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். யாழ், வன்னி தேர்தல் மாவட்டங்களில் குறைவான வாக்குப் பதிவே நடந்துள்ளது வேறு முறைப்பாடுகளும் கிடைத்துள்ளது இதனால் இதுகுறித்து உங்களுடன் ஆராயவே அழைத்துள்ளேன் என தேர்தல் ஆணையாளர் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் கூறினார்.

தேர்தல் சட்டத்தின் பிரகாரம் வன்னி, யாழ். தேர்தல்களை ரத்துச் செய்ய தனக்கு அதிகாரம் உண்டு எனவும் அவர் சுட்டிக்காட்டினார். அப்போது கருத்துத் தெரிவித்த ஐ. தே. க பிரதிநிதி கே. என். சொக்ஸி அம் மாவட்டங்களின் தேர்தல்களை ரத்துச் செய்வதானால் மீண்டும் அங்கு வாக்களிப்பை நடத்தும் ஏற்பாடு குறித்து 14 நாட்களினுள் அறிவிக்க வேண்டும். ஆனால் அம் மாவட்டங்களில் மீண்டும் இப்போதைக்கு தேர்தல் நடத்தக்கூடிய சூழ்நிலை இல்லை என சுட்டிக்காட்டினார். சுதந்திரக்கட்சி தரப்பிலும் இதே கருத்தே கூறப்பட்டது இதையடுத்து நடந்து முடிந்த தேர்தல் முடிவை ஏற்பது என அங்கு முடிவு செய்யப்பட்டது.

இதன்பின்னர் முடிவுகள் தேர்தல் ஆணையாளரினால் அன்று மாலையில் வெளியிடப்பட்டது.

பம்பாய் குண்டு வெடிப்பு;

## இன்டர் போல் உதவியை இந்தியா நாடுகின்றது

பம்பாய் குண்டு வெடிப்பு வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவர்களில் பாகிஸ்தானில் இருப்பவர்களின் இடத்தைக் கண்டுபிடிக்குமாறு சர்வதேச உளவுப்படை இன்ரபோலை இந்திய உளவுத்துறை கேட்டுள்ளது.

புதுடில்லியில் கடந்த 5-ம் திகதி மத்திய உளவுப் பிரிவினால் கைது செய்யப்பட்ட யாகூப் மேமன் குறிப்பிட்ட தகவலின் அடிப்படையில் சர்வதேச உளவுப் படையிடம் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக புதுடில்லியில் அதிகார வட்டாரங்கள் தெரிவித்தன.

## தடாச் சட்டத்தை நீக்க மத்திய அரசு தயங்காது

### பைலட் எச்சரிக்கை

(டில்லி)

அடுத்த ஆண்டு நீடிக்கப்படவேண்டிய தடாச் சட்டத்தை ரத்துச் செய்ய மத்திய அரசு தயக்கம் காட்டாது என மத்திய உள்துறைஇணை அமைச்சர் ராஜேஸ் பைலட் தெரிவித்துள்ளார்.

சில நாடுகளுடனும் சிறுபான்மையினருக்கு எதிராக இந்ததடாச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப் படுவதாக கிடைத்த புகார்களை அடுத்து இத்தகைய முடிவை மேற்கொள்ள மத்திய அரசு தயங்காது என்று இணை அமைச்சர் பம்பாயில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தெரிவித்தார்,

இதேசமயம் தேசிய மனித உரிமைக்குழு புதுடில்லியில் நாளை நடத்த விருக்கும் ஓர் கூட்டத்தில் தடாச் சட்டம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பது குறித்து விரிவாக ஆராயப்படும் என இக்குழுவின் தலைவர் நீதிபதி ரங்கநாத் முஸ்ற்ரா கூறியுள்ளார்.

இக் கூட்டத்தில் இது வரை காலமும் சகல மாநிலங்களிலும் தடாச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகள் குறித்து ஆராயப்படும் என்றார்.

தடாச் சட்டம் செல்லுபடியாகும் என்ற தனது கூற்றை மறுபரிசீலனை செய்யுமாறு உச்ச நீதிமன்றத்தை தேசிய மனித உரிமைகள் குழு கேட்டுக் கொள்ளும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

1994ற்கான யாழ். உதைபந்தாட்டச் சங்கம்|வலி கிழக்கு உதைபந்தாட்டச் சங்கம் ''நொக்கவுட்'' முறையிலான உதைபந்தாட்டப் போட்டியின் 'சி' பிரிவு, 'பி' பிரிவு ஆட்டங்கள் இன்று மாலை சென் அன்ரனிஸ் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் மாலை 4 மணிக்கு ஈச்சமோட்டையை எதிர்த்து உதயசூரியனும் மாலை 5 மணிக்கு வைக்கிங்ஸ்ஸை எதிர்த்து பொற்பதியும் மோதுகின்றன.

கடந்த 19-ம் திகதி ஆரம்பமான இப் போட்டித் தொடரில் 26 விளையாட்டுக் கழகங்கள் மோதுகின்றன. ஏ, பி, சி, என மூன்று பிரிவுகளுக்கிடையில் நடைபெறும் போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் வெற்றிபெறும் மூன்று கழகங்கள் தெரிவு செய்யப்பட்டு, பின்பு அக் கழகங்களுக்கிடையே போட்டி நடாத்தப்படவுள்ளது இப் போட்டியில் வெற்றிபெறும் மூன்று கழகங்கள் பின்பு மாவட்ட ரீதியில் நடாத்தப்படும் போட்டிக்கு அனுப்பிவைக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

## மருந்தகம்

நல்லூர் உற்சவத்திற்கு வரும் அடியார்களின் நன்மை கருதி நல்லூர் மேற்கு வீதியில் இடம்பெயர்ந்தோர் வைத்திய நிலையம் (அரசினர் மத்திய மருந்தகம்) ஒன்று காலை 7.00 மணி தொடக்கம் மாலை 7.00 மணி வரை திறந்திருந்து சேவையாற்றும்.

மேற்குறிப்பிட்ட நேரத்தில் நோயாளர்களைப் பார்வையிட்டு மருந்து வகைகள் வழங்கப்படும் என இவ் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி எஸ். பராசசிங்கம் அறிவித்துள்ளார். (24)

## கைதியின் கண்ணை தோண்டி எடுத்த அதிகாரி

மஹர சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவரின் ஒரு கண் சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவரினால் தோண்டி எடுக்கப்பட்டுள்ளதாக 'லங்காதீப' செய்தி வெளியிட்டுள்ளது- பின்னர் அக்கண்ணை 'சொப்பிங்' பையில் இட்டு அவரையும் கண்ணையும் கொண்டு சென்று ஆஸ்பத்திரியில் சேர்த்துள்ளனர்.

இது தொடர்பாக இதுவரை சிறைச்சாலை அதிகாரிகள் மீதும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

# தமிழர் அபிலாசையை தீர்க்குமானால் சந்திரிகா கொள்கையை ஆதரிப்போம்

ஜோசப் பரராஜசிங்கம்

(கொழும்பு)

புதிய அரசு இனப்பிரச்சினை தீர்விற்கு எடுக்கும் முயற்சிகள் அது தமிழரின் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடியதாக இருக்குமானால் தமிழர் விடுதலைக் கூட்டணி புதிய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசை ஆதரிக்கும் என மட்டக்களப்பு எம். பியான ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

பி. பி ஸி. தமிழோசைக்கு அவர் அளித்த பேட்டியின் விபரம் வருமாறு;

கேள்வி: தேர்தலில் த. வி. கூக்கு ஐந்து இடங்கள் கிடைத்துள்ளன. பாராளுமன்றில் நீங்கள் அரசை ஆதரிக்கப்போகின்றீர்களா அல்லது எதிரணியில் இருக்கப் போகின்றீர்களா?

பதில்: நாம் அரசை முழுமையாக ஆதரிக்கப்போவதில்லை எதிர்க் கட்சியில் தனிக்குழுவாக இயங்க நாம் முடிவெடுத்துள்ளோம் அதேசமயம் தமிழரின் பிரச்சினைகளை தீர்க்க அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு அது தமிழ் மக்களின் அபிலாசைகளை தீர்க்கும் வகையிலான ஏற்பாடாயின் அச்சமயத்தில் அரசை ஆதரிப்போம்.

கேள்வி: இனப்பிரச்சினைக்கு சந்திரிகாவால் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை உங்களுக்குண்டா?

பதில்: என்னை பொறுத்த வரையில் இலங்கை சுதந்திரம் அடைந்த முதல் இந்த நாட்டை. ஐ தே.கவும் சுதந்திரக் கட்சியும் ஆண்டுவந்துள்ளன. ஐ. தே. க. 28 ஆண்டுகளும் சுதந்திரக் கட்சி 16 ஆண்டுகளும் ஆண்டுவந்துள்ளன. ஆனால் இவ்விரு கட்சிகளும் அவர்களின் தலைமைகளும் தமிழர்களின் பிரச்சினையை இதுவரை தீர்க்கவில்லை. பல ஒப்பந்தங்கள் செய்தபோதிலும் பல பேச்சுகள் நடந்தும் அவை எல்லாம் தூக்கி வீசப்பட்ட கதையே உண்டு. இருப்பினும் தற்போது பிரதமராக வந்திருப்பவர் ஒரு புதியவர். புதிய கொள்கைகளை பிரதிபலிக்கும் முற்போக்குவாதிபோல் தெரிகிறது, எனவே அவரோடு சில சமயம் பேசினால் அவர் இந்தப் பிரச்சினையை தீர்க்கக்கூடியவர் என்ற நம்பிக்கை எனக்கும் என் கட்சிக்கும் உண்டு. அதேநேரத்தில் அவரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மட்டுமல்ல அவருடைய மேடைகளில் தேர்தல் காலமான 35 நாட்களும் அவர் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது தமது முக்கிய குறிக்கோளாக இருக்கும் என்றும் போரை நிறுத்துவது அடுத்த குறிக்கோள் என்றும் கூறி வந்துள்ளார் எனவே அந்த நம்பிக்கையில் சில சமயம் அவர் இப்பிரச்சினையை தீர்க்க உந்துசக்தியான சில செயற்பாடுகளை செய்யக் கூடும் என்ற நம்பிக்கை எனக்குண்டு

கேள்வி: ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணம் என்பதை சந்திரிகா நிராகரித்துள்ளார் இது குறித்து உங்கள் நிலைப்பாடு என்ன?

பதில்; ஆனால் அவரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வடக்கு கிழக்கு இணைப்பு என்ற அப்பிரச்சினைக்கு சில எல்லை மாற்றங்களோடு அவற்றை செய்யக்கூடிய 'வாய்ப்பு செய்யலாம் என்று கூறியுள்ளார் வட- கிழக்கு இணைப்பு என்பது எம்மைப்பொறுத்தவரையில் தமிழர்களின் ஆதிக்கமான பிரதேசம் என்ற காரணத்தால் சில சமயங்களில் சில பகுதிகளை விட்டு வட- கிழக்கு இணைப்பை செய்யும் திட்டம் ஒன்றை அவர் சமர்ப்பித்தால் அதை நாம் ஏற்கக்கூடியதாக இருக்கும் ஆனால் வடக்கு கிழக்கை முழுமையாக பிரிக்கவேண்டும் என்ற செயற்பாடு புதிய தலைவரிடம் இல்லை என்றே எண்ணுகிறேன் எனவும் தெரிவித்தார்

# சந்திரசேகரனுக்கு உதவிஅமைச்சர் பதவி?

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணி தலைவர் பெ. சந்திரசேகரனுக்கு பொ- ஐ. மு. அரசில் உதவி அமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளதாக தெரிய வருகிறது.

வர்த்தகம், போக்குவரத்து. பொதுநிர்வாகம் ஆகியவற்றில் ஒன்றில் இவர் உதவி அமைச்சராக நியமிக்கப்படலாம்எனக் கூறப்படுகிறது.

சந்திரசேகரன் நுவரெலியா மாவட்டத்திலிருந்து தெரிவான சுயேட்சை உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது,

# லஞ்ச ஊழலைத் தடுக்க நிரந்தர ஆணைக்குழு அமையும்

## விரைவில் சட்டமூலம் என்கிறார் அமைச்சர் பீரிஸ்

லஞ்ச ஊழல் மோசடிகளை தடுப்பதற்காக நிரந்தர ஆணைக்குழுவை அமைப்பதற்கான சட்டமூலம் ஏழு வாரகாலத்தில் பாராளுமன்றிற்கு கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அரசியலமைப்பு விவகார

மூன்றிலிரண்டு பெரும்பான்மைபலம் தேவையில்லை இது நாட்டிற்கு மிக அவசியமான சட்டமூலம் எனவே கட்சிபேதமின்றி இதனை அனைவரும் வரவேற்பர் என நம்புகிறேன்.

ஏற்கனவே லஞ்சம் ஊழல்

முன் நிறுத்தப்படுவர். இவர்கள் மீண்டும் எம். பிகளாக தெரிவுசெய்யப்பட்டிருப்பினும், தெரிவாகாவிட்டிருப்பினும் விசாரணைக்குட்படுத்தப்படுவர்.

விசாரணையில் குற்றவாளிகளாக கருதப்படுபவர்களுக்கு


மரண அறிவித்தல்கள்

சிவஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள்
வெங்கடேசக் குருக்கள் (முருகையர்)


சந்திரிகாவின்

ஜனாதிபதி

## வெங்கடேசக் குருக்கள் (முருகையர்)

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவில் முன்னாள் பிரதம குருக்கள் சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள் வெங்கடேசக் குருக்கள் 21-08-94 ஞாயிறு அன்று சிவபதம் அடைந்துவிட்டார். இவர், மீனாட்சியம்மாவின் அன்புக் கணவர் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 22-8-94 திங்கள் காலை 10 மணியளவில் கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்திற்கு அண்மையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: பெறாமக்கள்

சிவஸ்ரீ இ. சோமசுந்தரக்குருக்கள் (சுப்பையர்)
சிவஸ்ரீ இ. விஸ்வேஸ்வரக்குருக்கள் (சந்திரன் ஐயர்)
சிவஸ்ரீ இ. சூரியப்பிரபாகரக்குருக்கள் (சூரி ஐயர்)
பிரம்மஸ்ரீ இ. முரளிதரசர்மா (முரளி ஐயர்)

(9172)

## முருகேசு சோமலிங்கம்

குப்பிளானைச் சேர்ந்த முருகேசு சோமலிங்கம் 21-08-94 அன்று சிவபதம் எய்தியுள்ளார். இவர் காலம்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும் சிவலிங்கம் (ஓய்வுபெற்ற பொலிஸ் சாஜன்), காலம்சென்ற சீவரட்ணம், காலம்சென்ற சிவசுப்பிரமணியம், சிவஞானாம்பிகை, திலகவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜசேகரம் (ஆசிரியர்), காசிராசா (யூனியன் கல்லூரி), கமலாம்பிகை, பூபதி ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜந்தினி, சிவசேகரன், அனுஷினி, செந்தூர்சேகரன், சிவாபரன், கமலசுதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை 22-08-94 ஒருமணியளவில் கீழ்க்காணும் விலாசத்தில் நடைபெற்றுபூதவுடல்தகனக் கிரிகைகளுக்காக உரும்பராய் மயானத்திற்குஎடுத்துச்செல்லப்படும். என்பதை உற்றார், உறவினர் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல்:

ஜெனறேற்றர் ஒழுங்கை
(பிரதேச சபை)
உரும்பராய்.

சோ. சிவலிங்கம்
(மகன்)

(9173)

### சந்திரிகாவின்

மான சூழ்நிலையை உருவாக்கியதற்காக ஐ. தே. கவிற்கும் முன்னாள் பிரதமர் ரணிலுக்கும் இ. தொ. கா. பாராட்டுதலை தெரிவிக்கின்றது எனவும் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.

### ஈ. பி. டி. பி.

வெளியேற்றப்பட்டனர்

கடற்படையினரால் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழுவின் அனுமதி பெற்றுவந்தால் மட்டும் அனுமதிப்பதாகச் சொல்லப்பட்டது

(தி) (பா)

### பொ. ஐ. மு.

ஜன ஐக்கிய முன்னணி பெற்ற வெற்றிக்கு தனிப்பட்ட முறையிலும் இ- தொ, கா- சார்பிலும் தொண்டமான் வாழ்த்துத்தெரிவித்துள்ளார்.

### ஈ. பி. டி. பியின்

றப்பு தெரிவித்துள்ளது அந்த இயக்கம் ஜன நாயகப்பாதைக்கு திரும்புவதை நாம் விரும்புகிறோம் விடுதலைப்புலிகளுடன் நாம் இணக்கம் கண்டால் அவர்கள் வசமுள்ள பாதுகாப்பு படையினரை விடுவிக்க முடியும்-

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவை பெறநாம் அக்கட்சியுடன் பேச்சு நடத்தி வருகிறோம் புதிய அரசு எந்த சவாலையும் எதிர்கொண்டு பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும்

ஜனாதிபதி தேர்தலில் யார் போட்டியிடுவது என்பதை நாம் இன்னும் முடிவு செய்யவில்லை அத் தேர்தலில் நாம் வெற்றி பெற்றால் ஜனாதிபதி முறை பின்னர் ஒழிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்-

### ஜனாதிபதி

வடிக்கை இதுவென தெரிவித்துள்ளார்.

வன்செயல்கள் வெகுவாக குறைந்துள்ளபோதும் ஊரடங்கு சட்டத்தை தொடர்ச்சியாக பிறப்பித்து மக்களை கஷ்டப்படுத்தி அதன் மூலம் வெறுப்பை தம் கட்சிக்கு பெற்றுக்கொள்ளவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.


யாழ். ஸ்ரீதர்
அகலத்திரையில்

அனேக ரசிகர்களின்
வேண்டுகோளுக்கிணங்க

தினசரி காலை 10-30
மணிக்கு மட்டும்

'மண்ணுக்காக'

தினசரி மாலை 4-00 மணி
6-00 மணி காட்சிகளாக

CHUCK NORRIS
நடித்த
BRAD-
DOCK

MISSING IN
ACTION - III
(தாக்குதல் சித்திரம்)

ஒவ்வொரு சனி, ஞாயிறு
தினங்களில்
பி. ப. 2-00 மணிக்கு மட்டும்

''ஒளி வீச்சு''
யூன் - 94
காண்பிக்கப்படும்.
(சி-10131)


கைகள் எடுக்கப்படுவதாக அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இச்சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற

### இந்திய

இவ்வாறு கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் நரேஷ்வர் தயாள் கூறியுள்ளார்.

கடந்த 15ம் திகதியன்று இந்தியாவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள ஒரு செய்தியில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இரு நாடுகளும் அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. அதனால் பிராந்தியத்தில் அமைதிக்கும், சமாதானத்திற்கும், ஸ்திரத்தன்மைக்கும், கூட்டுறவு அடிப்படையில் உதவுகின்றன எனவும் தெரிவித்துள்ளார்.

### புதிய

ருப்பதாகவும் அது தெரிவித்தது.

பொ. ஐ மு. வுடன் இணைந்து கொள்வதே ஈ பி.டி.பி. செய்யக்கூடியது ஆகும் என தெரிவித்த பிரான்ஸ் வானொலி தவறினால் ஆயுதம், உணவு, உடை, என்பவற்றுக்கு திண்டாடும் நிலை ஏற்படும் எனவும் தெரிவித்தது.

இவர்கள் செல்ல எந்த இடமும் இல்லாத நிலையில் உளரீதியாக பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் ஈ, பி, டி, பி, தேர்தல் காலங்களில் அரசியல் ரீதியாக பொதுஜன ஐக்கிய முன்னணியை எதிர்த்தவர்கள் என்பதாலும் ஆயுத ரீதியாக பொதுஜன ஐக்கிய முன்னணியினரின் நடவடிக்கைகளை அடக்க முயன்றவர்கள் என்பதாலும் ஈ பி டி பி குழுவினரை இணைத்துக்கொள்ள பொதுஜன ஐக்கிய முன்னணியினர் விரும்பவில்லை எனத் தெரிகிறது.

கிறேன்.

ஏற்கனவே லஞ்சம் ஊழல் சம்பந்தமாக குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் எம் பிகள், முன்னாள் அமைச்சர்கள் லஞ்ச ஊழல் ஆணைக்குழு

### உலகில்

உற்பத்தி 210 கோடி டன்களாக இருக்கும்

அமெரிக்காவில் ஒருவர் சராசரி ஆண்டு ஒன்றிற்கு 1765,இறாத்தல் தானியத்தை உட்கொள்கிறார் இக்கணக்கின்படி பார்த்தால் உலக உணவு உற்பத்தி 250 கோடி மக்களுக்கே அப்போது போதுமானதாக இருக்கும்

இந்தியா போன்ற குறைந்த கைத்தொழில் அபிவிருத்தி நாடுகளின் மக்கள் அமெரிக்கர்களின் உணவு உபயோகத்தில் கால்பங்கே உட்கொள்கின்றனர் உணவு உற்பத்தியை அதிகரிப்பதை விட குடும்பக் கட்டுப்பாடே இதற்குச் சிறந்த பரிகாரம்

விசாரணையில் குற்றவாளிகளாக கருதப்படுபவர்களுக்கு குடியுரிமை ரத்துபோன்ற கடும் தண்டனைகள் வழங்கப்படும் எனவும் அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

### மட்டு

பொலிஸ் பிரிவிலுள்ள மாவடி வேம்பு பகுதியிலும் குண்டுகள் வெடித்தன.

குறிஞ்சாமுனையில் வாக்குச் சாவடி அமைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து சுமார் 300 யார் தொலைவிலும், மாவடி வேம்பு வாக்குச் சாவடியிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவிலும் குண்டு வெடிப்புகள் இடம்பெற்றன.

என வெஸ்டர்பிரௌன் என்ற ஆராய்ச்சியாளர் கூறியுள்ளார்

இத்திட்டத்தை அமுல்நடத்தினால் தற்போதைய 550 கோடியாக இருக்கும் மக்கள் தொகை 2050ஆம் ஆண்டில் 780கோடியாகவும்இருக்கும்

## மரண அறிவித்தல்

### தம்பிராசா வினிதா

புங்குடுதீவு மேற்கு 4-ம் வட்டாரத்தைச் சேர்ந்த தம்பிராசா சரஸ்வதியின் அன்புமகள் வினிதா 21-8-94 அன்று காலமானார்.

இவர் தம்பிராசா சரஸ்வதியின் அன்பு மகளும் விஜிதா (புங்குடுதீவு மகாவித்தியாலயம்), விஜிதரன் (புங்குடுதீவு மகாவித்தியாலயம்), வினுஷா (யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் (22-8-94) திங்கட்கிழமை மாலை 2 மணிக்கு முத்திரைச் சந்தியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்

தற்போதைய முகவரி:
இல. 860, பருத்தித்துறை வீதி
முத்திரைச்சந்தி, யாழ்.

தகவல்:
குடும்பத்தினர்

(9177)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம்22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது